விலை: 30.00
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபது

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

*சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 மாசி 11 செவ்வாய்க்கிழமை (23.02.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 066*

## காணாமல் ஆக்கப்பட்டோர் சங்க செயலாளரிடம்

### பயங்கரவாத தடுப்புப் பிரிவு நேற்று விசாரணை

(வவுனியா)

வவுனியாவில் கடந்த 1465 நாட்களாக சுழற்சி முறை உணவு தவிர்ப்பு 19

## சிறுபான்மையினரின் கலாசார மற்றும் மத அடையாளத்தை அழிக்க முயற்சி



### ஜெனிவா ஆரம்ப உரையில் ஐ.நா செயலாளர்

(ஜெனிவா)

உலகம் முழுவதும் சிறுபான்மை சமூகங்கள் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ள நிலையில் அவர்கள் தொடர்பாக விசேட கவனம் செலுத்த வேண்டும் என ஐக்கிய நாடுகள் பொதுச் செயலாளர் அன்டோனியோ குட்ரெஸ் தெரிவித்துள் 19


## ஜெனிவா அமர்வு நேற்று ஆரம்பம்


# இலங்கை விவகாரம் இன்று ஆராய்வு

*(கொழும்பு)*

ஜெனிவா கூட்டத் தொடர் நேற்று ஆரம்பமாகியுள்ள நிலையில் ஐ.நா மனித உரிமைகள் சபையில் இலங்கை விவகாரம் தொடர்பில் இன்று விவாதிக்கப்படவுள்ளது.

*(19ஆம் பக்கம் பார்க்க)*


(கோப்புப் படம்)



அன்பு வாசகர்களே!
இதுவரை சிறுவர் அரங்கில் வெளியாகிய **மகா அலெக்ஸாண்டர்** தொடர் இன்றுடன் நிறைவு பெறவுள்ள நிலையில் நாளை முதல் **மகாபாரத** தொடர் வெளியாகவுள்ளது.
*வாசிக்கத் தவறாதீர்கள்*

## அமெரிக்கத் தூதுவர் இன்று யாழ்.விஜயம்

(கொழும்பு)

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர்அலைனா பி.ரெப்லிற்ஸ் இன்று 19

## வடக்கில் நேற்று ஐவருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையின் ஆய்வுகூடத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட கொரோனா பரிசோதனையில், வடக்கில் 5 பேர் கொரோனா தொற்றுடன் அடையாளம் காணப்பட்டனர். 19

## நல்லிணக்கம், பொறுப்புக்கூறலை வலியுறுத்தி இலங்கைக்கு எதிராக தீர்மானம்

### ஜெனிவாவில் பிரிட்டன் தெரிவிப்பு

(ஜெனிவா)

நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறல் ஆகியவற்றில் கவனம் செலுத்தும் வகையில் இலங்கை தொடர்பான புதிய தீர்மானத்தை முன்வைப்போம் என பிரிட்டன் வெளியுறவு அமைச்சர் டொமினிக் ராப் நேற்று ஐ.நா.மனித உரிமைகள் பேரவை ஆரம்ப நாள் அமர்வில் தெரிவித்தார்.

அத்துடன் மியான்மர், பெலாரஸ், ரஷ்யா 19

### சமத்துவம், கௌரவம், சமாதானத்துடன்

## இலங்கைத் தமிழரின் வாழ்வை உறுதி செய்வது இந்தியாவின் பொறுப்பு

### இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் சிங்

(சேலம்)

இலங்கையில் தமிழ் மக்கள் சமத்துவம், கௌரவம், சமாதானம் ஆகியவற்றுடன் வாழ்வதை உறுதி செய்வது குறித்து இந்திய மத்திய அரசாங்கம் அர்ப்பணிப்புடன் உள்ளது என இந்திய பாதுகாப்பு அமைச்சர் ராஜ்நாத் 19

## பேரணி தொடர்பில் சுமந்திரனிடம் பொலிஸார் வாக்குமூலம்

### தேநீர் கொடுத்து செல்பி எடுத்த எம்.பி



(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினரும் பேச 19

## நாட்டில் மேலும் 5 பேர் பலி

### நேற்றும் + 518 தொற்றாளர்கள்

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி மேலும் 5 பேர் 19

### யாழ்.போதனா வைத்தியசாலையின்

## நரம்பியல் மருத்துவ வல்லுநருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை நரம்பியல் மருத்துவ வல்லுநர் ஒருவருக்கு கொரோனா வைரஸ் தொற்றுள்ளமை நேற்று திங்கட்கிழமை கண்டறியப்பட்டுள்ளது. 19

### கிளிநொச்சியில் கற்பிக்கும்

## சாவகச்சேரியை சேர்ந்த ஆசிரியைக்கு கொரோனா

(கிளிநொச்சி)

கிளிநொச்சி, பூநகரியிலுள்ள பாடசாலை ஒன்றில் கற்பிக்கும் ஆசிரியை ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டிருக்கின்றது.

குறித்த பாடசாலையில் கற்பிக்கும் யாழ். 19

## யாழின் முத்தீவுகள் தொடர்பில்
# பிரதி இந்திய உயர்ஸ்தானிகருடன் தமிழரசின் தலைவர் கலந்துரையாடல்



(கொழும்பு)

யாழ்ப்பாணத்திலுள்ள 3 தீவுகளை காற்றாலை மற்றும் சூரிய சக்தி மின் உற்பத்தி திட்டத்திற்காக சீனாவுக்கு வழங்கும் அரசாங்கத்தின் நடவடிக்கை தொடர்பில் பிரதி இந்திய உயர்ஸ்தானிகர் வினோத் கே ஜேக்கப் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் கலந்துரையாடியுள்ளார்.

இலங்கை தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜாவுடன் பிரதி இந்திய உயர்ஸ்தானிகர் வினோத் கே ஜேக்கப் நேற்றைய தினம் முக்கிய சந்திப்பை மேற்கொண்டுள்ளார்.

13 ஆவது திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்துவதனூடாக அர்த்தபுஷ்டியான அதிகாரப்பகிர்வு மற்றும் வடக்கு கிழக்குக்கான அபிவிருத்தி மீதான தமது நிலைப்பாட்டினை இந்தியா மீள வலியுறுத்தியுள்ளது.

இதன்போது அவர் இந்தியாவின் நிலைப்பாட்டை வலியுறுத்தியதாக, இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகரகம் தமது டுவிட்டர் தளத்தில் தெரிவித்துள்ளது.

மாவை சேனாதிராஜாவுடன் பிரதி இந்திய உயர்ஸ்தானிகர் ஆக்கபூர்வமான சந்திப்பினை மேற்கொண்டதாகவும் இந்திய உயர்ஸ்தானிகரகம் குறிப்பிட்டுள்ளது. (ம-03)

# யாழ். போதனா வைத்தியசாலையின் பாதுகாப்பு சிறப்பு நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் நரம்பியல் வைத்திய நிபுணர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதியாகியுள்ள நிலையில், வைத்தியசாலையில் மேற் கொள்ளப்பட வேண்டிய பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து ஆராய சிறப்பு நடவடிக்கை குழு அமைக்கப்பட்டிருகின்றது.

மேற்படி தகவலை யாழ். போதனா வைத்தியசாலை பதில் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ச.ஸ்ரீபவானந்தராஜா கூறியுள்ளார்.

இது குறித்து மேலும் அவர் கூறுகையில், நரம்பியல் வைத்திய நிபுணருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ள நிலையில், அது குறித்து எவரும் அச்சப்பட வேண்டிய அவசியமில்லை. போதனா வைத்தியசாலையில் சுகாதார பாதுகாப்பு நடைமுறைகள் இறுக்கமாக கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

நேற்று நடத்தப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் வைத்தியருக்கு தொற்று உறுதியான நிலையில், வைத்தியர்களுக்கிடையில் நடத்தப்பட்ட பரிசோதனையில் கலந்துரையாடப்பட்டு தொற்றுக்குள்ளான வைத்தியர் சிகிச்சைக்காக கொழும்புக்கு அனுப்பட்டிருக்கின்றார்.

மேலும் வைத்தியசாலையின் செயற்பாடுகள் அனைத்தும் சுகாதார விதிமுறைகளுக்கு அமைவாக எந்த விதமான இடையூறுகளுமின்றி நடைபெறுகின்றன என்றார். (ம-03)

31 ஆம் நாள் நினைவு தினமும்
நன்றி நவிலலும்



தோற்றம் 23 . 02 . 1953
மறைவு 24 . 01 . 2021

கடந்த 24.01.2021 அன்று இறைபதமடைந்த
எமது குடும்பத் தலைவர்
அமரர் வைத்தியகலாநிதி
திரு. தம்பிப்பிள்ளை சிங்கஅரியரட்ணம்
அவர்களின் மரணச்செய்தி அறிந்து நேரிலும், தொலைபேசியிலும் சமூகவலைத்தளங்கள் மூலமும் மலர் வளையங்கள் வைத்தும் அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் மற்றும் அயலவர்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எம் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். மேலும் அமரர் நோயுற்றிருந்த வேளையில் அவருக்கு அர்ப்பணிப்புடனான மருத்துவ சேவைகளையும், ஆலோசனைகளையும் வழங்கி உதவிய யாழ். போதனா வைத்தியசாலை வைத்தியர்கள், தாதிமார்கள் மற்றும் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வட்டு தெற்கு,
வட்டுக்கோட்டை.

(C-1507)

தகவல்:
குடும்பத்தினர்

## சங்குப்பிட்டி பாலத்திற்கருகிலிருந்த
# பிள்ளையார் சிலையை காணவில்லை

(யாழ்ப்பாணம்)

ருத்திரசேனை அமைப்பால் சங்குப்பிட்டி பாலத்திற்கு அருகில் பிரதிஷ்டை செய்யப்பட்ட பிள்ளையார்சிலை ஒரு வாரத்திற்குள் காணாமலாக்கப்பட்டுள்ளது.

பல்வேறு சவால்களுக்கு மத்தியில் குறித்த பகுதியில் கடந்த வாரமே நிறுவப்பட்ட பிள்ளையார் அங்கிருந்து காணாமலாக்கப்பட்டுள்ளார்.

விடயம் தொடர்பாக யாருமே உரிமை கோராமலிருப்பினும் சில திணைக்களங்கள் தம்மிடம் அனுமதி பெறாமல் குறித்த விடயம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக பொலிஸ் நிலையத்தில் முறையிட்ட நிலையில் இச்சம்பவம் பதிவாகியுள்ளது.

(ம-03)

# யாழில் பணம் பறிக்கும் கும்பல்
## இளைஞர்களால் மடக்கிப் பிடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் நாவற்குழிக்கும் செம்மணிக்கும் இடைப்பட்ட பகுதியில் மாலைவேளையில் பயணிப்பவர்களை வழிமறித்து பணம் பறிக்கும் கும்பல் நேற்று மாலை மடக்கிப்பிடிக்கப்பட்டது.

நாளாந்தம் மாலை வேளையில் தனியே பயணிப்பவர்களை வழிமறிக்கும் நால்வர் கொண்ட கும்பல் தமது வாகனத்திற்கு பெற்றோல் இல்லை என்று தெரிவித்து பணம் தருமாறு மிரட்டல் பாணியில் பணம் பறிக்கும் செயற்பாட்டில் ஈடுபட்டு வந்திருக்கின்றது.

இந்தச் சம்பவம் தொடர்ந்தும் நடைபெற்றுவந்த நிலையில், நாவற்குழி இளைஞர்கள் ஒன்றிணைந்து நேற்று குறித்த நபர்களை சுற்றிவளைத்திருக்கின்றனர்.

அவ்வேளை அந்தப் பகுதிக்குச் சென்ற இராணுவத்தினர் மற்றும் பொலிஸாரும் சுற்றிவளைத்த இளைஞர்களிடம் நடந்த சம்பவம் தொடர்பில் கேட்டிருக்கின்றனர்.

பணம் பறிக்கும் நடவடிக்கை குறித்து அவர்கள் விளக்கமளித்த நிலையில், சுற்றிவளைக்கப்பட்ட நால்வரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளனர்.

(ம-03,33)

## தீயில் கருகியபோதிலும்
# உடலில் உயிருடன் இருந்த கொரோனா வைரஸ்

(கொழும்பு)

தீவிபத்தில் கருகி பலியான மூதாட்டியின் உடம்பிலிருந்த கொரோனா கிருமி அழிவடையாமல் இருந்தது அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்த சம்பவம் இலங்கையில் பதிவாகியுள்ளது. இது தொடர்பில் தெரியவருவதாவது,

காலி, ஹப்புகல - பொரலியதொலவத்த பிரதேசத்தைச் சேர்ந்த 71 வயது மூதாட்டி, நீண்டகாலமாக விசேட தேவையுடையவராக இருந்துள்ளார்.

தனது வீட்டின் அறையில் புகை எழும்புவதை அவதானித்த குறித்த மூதாட்டி, சக்கரநாற்காலியின் உதவியில் அதனை பார்க்கச் சென்றபோது தீயில் கருகியுள்ளார்.

அதன் பின் உடனடியாக கராபிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டபோதிலும் அவர் உயிரிழந்த நிலையில் அவருக்கு பி.சி.ஆர் பரிசோதனை நடத்தப்பட்டது. பரிசோதனையின் முடிவு நேற்று வெளியாகி அதிர்ச்சியளித்திருக்கிறது.

குறித்த பெண் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டிருப்பது பரிசோதனை அறிக்கையில் தெரியவந்துள்ளது.

(ம-3)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603
021 567 1532

# குருந்தூரில் தமிழர்கள் வாழ்ந்தார்கள் சிங்கள இலக்கியங்களே இதற்கு சாட்சி

## வரலாற்றுத்துறை சிரேஷ்ட பேராசிரியர் புஸ்பரட்ணம்





(அக்கராயன்)

**குருந்தூரில் 13 ஆம் நூற்றாண்டுக்கு முன்பிருந்தே தமிழர்கள் வாழ்ந்தார்கள் என்பதற்கு பாலி சிங்கள இலக்கியங்களில் ஆதாரம் உண்டு என யாழ். பல்கலைக்கழகத்தின் வரலாற்றுத்துறை சிரேஷ்ட பேராசிரியர் ப. புஸ்பரட்ணம் தெரிவித்துள்ளார்.**

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணல் ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

குறித்த நேர்காணலில் மேலும் தெரிவித்துள்ள அவர், "வன்னிப் பிரதேசத்தில் உள்ள வரலாற்று பழைமை வாய்ந்த முக்கிய வரலாற்று மையங்களில் குருந்தலூர் (குருந்தூர்) ஒன்றாகும். பாலி இலக்கியங்களில் இவ்விடயம் குருந்தகம என்றும் தமிழில் இது குருந்தலூர் என்றும் அழைக்கப்படுகின்றது.

இந்த குருந்தலூர் என்பதே தொன்மையான தமிழ் இடப்பெயர் என்பது ஒரு தொன்மையான ஆதாரமாக காணப்படுகின்றது.

இந்தக் குருந்தலூரில் பௌத்த மதம் பரவுவதற்கு முன்னர் குருந்தலூர் (குருந்தூர்) அதன் சுற்றாடலிலும் ஆதி இரும்பு காலத்து பெருங்கற்கால பண்பாட்டு இருந்துள்ளது. ஆகவே அந்தப் பண்பாட்டு மக்களில் ஒரு பிரிவினர் பௌத்த மதம் பரவிய பொழுது அந்த மதத்தையும் தழுவியிருப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

இந்த குருந்தலூர் 13 ஆம் நூற்றாண்டில் கலிங்கமாகன் சாகவனுடைய ஆட்சியில் மிக முக்கிய ஒரு நகராக இருந்ததை சூளவம்சமும் ராஜவெளிய என்ற சிங்க இலக்கியமும் குறிப்பிடுகின்றது.

இந்த இடத்தில் 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆய்வு மேற்கொண்ட லூயிஸ் வன்னிக் கையேடு என்று நூலில், தான் அந்த இடத்துக்கு சென்ற பொழுது அங்கே பௌத்த கட்ட எச்சங்களோடு இந்து ஆலயத்தின் எச்சங்களையும் கண்டதாகக் குறிப்பிடுகிறார்.

அதிலேயே நந்தியோடு உடைந்த நந்தியும் அதனோடு இணைந்த கட்டட அழிபாடுகளையும் தான் கண்டதாக அவர் குறிப்பிடுகின்றார்.

1870 இல் போல் என்பவர் தான் இந்த இடத்துக்குச் சென்ற பொழுது பௌத்த கட்டட எச்சங்களுடன் தமிழ் கல்வெட்டுடன் கூடிய இந்து ஆலயங்களின் வழிபாடுகளையும் கண்டதாகக் குறிப்பிடுகிறார்.

ஆகவே இந்த குரு ந்தலூர் என்பது பௌத்த இந்து ஆலயங்கள் தோன்றி வளர்ந்த இடங்களாக காணப்படுகின்றன.

எனவே இந்த குருந்தலூரில் 13 ஆம் நூற்றாண்டுக்கு முன்பிருந்தே தமிழர்கள் வாழ்ந்தார்கள் என்பதற்கு பாலி சிங்கள இலக்கியங்களில் ஆதாரம் உண்டு.

ஆகவே இந்த குருந்தலூர் அகழ்வாய்வில் கிடைக்கும் தொல்பொருள் சான்றுகளை வைத்துக்கொண்டுதான் அது பாலி சிங்கள இலக்கியங்கள் கூறுகின்ற உண்மைத்தன்மையை உறுதிப்படுத்தலாம்" என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-4-350)

## சாதாரண தரப்பரீட்சை முடிவுகள் ஜூன் மாதம்

(கொழும்பு)

மார்ச் 1 முதல் 10 ஆம் திகதி வரை நடைபெறவுள்ள கல்விப் பொதுத் தராதர சாதாரணப் பரீட்சையின் முடிவுகள் ஜூன் மாதத்திற்குள் வெளியிடப்படும் என்று கல்வி அமைச்சர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்தார்.

நேற்று பத்தரமுல்ல, நெலும் மாவத்தையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

இம்முறை க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில் நாடு முழுவதிலும் இருந்து மொத்தம் 6 இலட்சத்து இருபத்து இரண்டாயிரத்து 305 மாணவர்கள், 4 ஆயிரத்து 513 பரீட்சை நிலையங்களில் பரீட்சை எழுதவுள்ளனர்.

கொவிட் -19 ஆல் பாதிக்கப்பட்ட பரீட்சார்த்திகளுக்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் இரண்டு சிறப்பு பரீட்சை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அதிபர்கள், பொதுச்சுகாதார பரிசோதகர்கள் மற்றும் பிராந்திய சுகாதார அலுவலர்களுடன் கலந்தாலோசித்து மாணவர்களின் ஆரோக்கியத்தை உறுதிப்படுத்த தேவையான ஏற்பாடுகள் ஏற்கனவே செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார். (நி-4)

## 20 ஆவது திருத்தம் இல்லாவிட்டால் ஜெனிவாவில் நெருக்கடியைக் குறைந்திருக்கலாம்

### என்கிறார் கரு



(கொழும்பு)

அரசியலமைப்பிற்கான 20 ஆவது திருத்தம் நிறைவேற்றப்படாமல் இருந்திருந்தால், இலங்கை அரசாங்கம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடருக்கு இன்னும் சிறப்பாக முகம் கொடுத்திருக்க முடியும் என்று முன்னாள் சபாநாயகர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தனது டுவிட்டர் பக்கத்தில் செய்திருக்கும் பதிவில் மேலும் தெரிவித்திருப்பதாவது,

அரசியலமைப்பிற்கான 20 ஆவது திருத்தத்தின் ஊடாக வழங்கப்பட்ட மிகச் செறிவான அதிகாரங்கள், அரசியல் ரீதியில் பாரிய பிளவொன்றைத் தோற்று வித்திருப்பதுடன் ஜனநாயகக் கட்டமைப்பையும் வலுவிழக்கச் செய்திருக்கிறது.

இந்நிலையில் அரசியலமைப்பிற்கான 20 ஆவது திருத்தம் நிறைவேற்றப்படாமல் இருந்திருந்தால், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 46 ஆவது கூட்டத்தொடரை இன்னும் சிறப்பாக எதிர்கொள்ளக்கூடிய நிலையில் இலங்கை அரசாங்கம் இருந்திருக்கும் என்று குறிப்பிட்டுள்ளார். (நி-4)

## இத்தாலியில் இலங்கையர் இருவர் உயிரிழப்பு

(ரோம்)

இத்தாலியில் வசித்து வந்த இலங்கையர்கள் இருவர், கொரோனா வைரஸ் தொற்றினால் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இத்தாலியில் மிலான் மற்றும் ரோம் ஆகிய பகுதிகளில் வசித்து வந்தவர்கள் இவ்வாறு உயிரிழந்துள்ளதாக கூறப்படுகின்றது.

அதாவது கொட்டாவ பகுதியைச் சேர்ந்த 57 வயதுடையவர், கொரோனா தொற்றுக்குள்ளாகி சிகிச்சை பெற்றுவந்த நிலையில் கடந்த 18 ஆம் திகதி உயிரிழந்துள்ளார் எனவும் அதேபோன்று காலி பிரதேசத்தைச் சேர்ந்த 52 வயதுடையவரும், கொரோனா தொற்றுக்குள்ளாகி சிகிச்சை பெற்று வந்த நிலையில் கடந்த 20 ஆம் திகதி உயிரிழந்துள்ளார் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த இருவரும், 20 வருடங்களுக்கும் மேல் இத்தாலியில் தமது குடும்பத்துடன் வசித்து வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. (நி-4)

## இலங்கை ரூபாவின் பெறுமதியில் வீழ்ச்சி இறக்குமதி செய்யும் பொருட்களின் விலை உச்சமடையும்

### பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கை

(கொழும்பு)

அமெரிக்க டொலருக்கு நிகராக இலங்கையின் ரூபாய் தற்போது வேகமாக வீழ்ச்சியடைந்துள்ளதையடுத்து வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யும் பொருட்களின் விலைகள் அதிகரிக்கும் என பொருளாதார நிபுணர்கள் தகவல் வெளியிட்டுள்ளனர்.

இதன் காரணமாக வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யும் அனைத்து பொருட்களின் விலைகளும் எதிர்காலத்தில் வேகமாக அதிகரிக்கும் எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இலங்கையின் பொருளாதாரத்திடம் இருக்கும் அந்நியச் செலாவணி கையிருப்பில் ஏற்பட்டுள்ள பாரதூரமான பற்றாக்குறையே இதற்கு காரணம்.

இதன் காரணமாக எதிர்கால செலவுகளுக்கு அரசுக்கு சொந்தமான ஏதாவது ஒரு சொத்தை வெளிநாட்டு நிறுவனத்திற்கு விற்பனை செய்து அந்நிய செலாவணி கையிருப்பை ஈடு செய்யும் நிலைமை இலங்கை அரசாங்கத்திற்கு ஏற்படும் எனவும் பொருளாதார நிபுணர்கள் எச்சரித்துள்ளனர். (நி-4)

# இதுவரை ஜொலிக்காத இந்திய அணி

# இம்முறை சாதிக்குமா?



பகல் - இரவு டெஸ்டில் இதுவரை பெரிய அளவில் ஜொலிக்காத இந்திய அணி இங்கிலாந்துக்கு எதிராக மிரட்டுமா? என்ற எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

இந்தியா - இங்கிலாந்து கிரிக்கெட் அணிகள் இடையிலான 3 ஆவது டெஸ்ட் போட்டி குஜராத் மாநிலம் ஆமதாபாத்தில் உள்ள சர்தார் பட்டேல் ஸ்டேடியத்தில் நாளை புதன்கிழமை தொடங்குகிறது. உலகின் மிகப் பெரிய கிரிக்கெட் மைதானத்தில் பகல்-இரவாக இந்த டெஸ்ட் நடத்தப்படுகிறது. இதற்காக பிரத்தியேகமாக மிளிரும் தன்மை கொண்ட இளஞ்சிவப்பு நிற பந்து பயன்படுத்தப்படுகிறது.

ரசிகர்களை ஈர்க்கவும் போட்டியில் விறுவிறுப்பு, சுவாரஸ்யத்தை அதிகரிக்கும் நோக்கிலும் பகல்-இரவு டெஸ்ட் போட்டி 2015ஆம்ஆண்டுஅறிமுகம்செய்யப்பட்டது. இதுவரை 15 பகல்-இரவு டெஸ்ட் போட்டிகள் அரங்கேறியுள்ளன. எல்லா போட்டியிலும் முடிவு கிடைத்திருப்பது சாதனைக்குரிய அம்சமாகும்.

அதிகபட்சமாக அவுஸ்திரேலிய அணி 8 பகல்-இரவு டெஸ்டில் விளையாடி அனைத்திலும் வெற்றி பெற்று தோல்வியே சந்திக்காத அணியாக வலம் வருகிறது.


இந்திய அணி நீண்டகாலமாக பகல்-இரவு டெஸ்டில் விளையாட தயக்கம் காட்டியது. சவுரவ் கங்குலி இந்திய கிரிக்கெட் வாரிய தலைவர் பதவிக்கு வந்ததும், கப்டன் விராட் கோலியிடம் பேசி சம்மதிக்க வைத்தார். பிங்க் பந்து டெஸ்டில் சதம் அடித்த முதல் இந்தியர் என்ற பெருமையை விராட் கோலி பெற்றார்.

பிங்க் பந்து அதிகமாக ஸ்விங் ஆகும். இதனால் வேகப்பந்து வீச்சாளர்களே வெகுவாக ஆதிக்கம் செலுத்தியுள்ளனர். ஒரு இலட்சத்து 10 ஆயிரம் இருக்கை வசதி கொண்ட பிரமாண்டமான ஆமதாபாத் சர்தார் பட்டேல் ஸ்டேடியம் புதிதாக கட்டப்பட்டது ஆகும்.

இதனால் ஆடுகளத்தன்மை எப்படி இருக்கும் என்பதை இன்னும் முழுமையாக வீரர்களால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஆடுகளத்தில் வேகப் பந்துக்கு சாதகமான சூழல் காணப்பட்டால் தங்களது கை ஓங்கும் என்று இப்போதே இங்கிலாந்து வீரர் ஜாக் கிராவ்லி கூறியுள்ளார். (4)

## மலிங்க அவுட்; புதிய கப்டன் நியமனம்

### ஒருநாள், இருபது-20 தொடருக்கான அணி அறிவிப்பு



மேற்கிந்திய தீவுகளுடனான ஒருநாள் மற்றும் இருபது-20 தொடரில் பங்கேற்கும் 20 வீரர்கள் கொண்ட இலங்கை அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்கிந்திய தீவுக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்ளவுள்ள இலங்கை அணி மூன்று இருபது-20, மூன்று ஒருநாள் போட்டியை தொடர்ந்து இரண்டு டெஸ்ட் போட்டிகளில் விளையாடவுள்ளது.

இந்நிலையில், ஒருநாள் மற்றும் இருபது-20 தொடரில் பங்கேற்கும் 20 வீரர்கள் அடங்கிய இலங்கை அணி விபரத்தை இலங்கை கிரிக்கெட் வெளியிட்டுள்ளது.

காயத்தில் இருந்து மீண்ட இலங்கையின் வழக்கமான டெஸ்ட் மற்றும் இருபது-20 அணித்தலைவர் திமுத் கருணாரத்ன அணியில் இடம்பிடித்துள்ளார், அதுமட்டுமன்றி மேற்கிந்திய தீவுக்கான ஒரு நாள் அணித்தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

எனினும், இலங்கையின் வழக்கமான இருபது-20 கப்டனான மலிங்க அணியில் இடம்பெறவில்லை, மலிங்கவுக்கு பதிலாக தசுன் சானக்கா கப்டனாக அறி விக்கப்பட்டுள்ளார்.

ஒரு நாள் மற்றும் இருபது-20 தொடருக்கான இலங்கை அணி வீரர்களின் விபரம்: திமுத் கருணாரத்ன (ஒரு நாள் அணியின் கப்டன்), தனுஷ்க குணதிலக்க, பதும் நிசங்கா, தினேஷ் சந்திமால், அஞ்சலோ மத்தியூஸ், நிரோஷன் திக்வெல்ல, ஓசத பெர்னாண்டோ, அஷேன் பண்டார, தசுன் சானக்க (இருபது-20 கப்டன்), திசர பெரேரா, ரமேஷ் தரிந்த மெண்டிஸ், வனிந்து ஹசரங்க, துஷ்மந்த சாமர, நுவான் பிரதீப், லஹிரு குமார, அஷித பெர்னாண்டோ. (4)



ஆனைக்கோட்டை லெவின்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் மைதான விஸ்தரிப்புகாக 4 பரப்பு காணி 42 இலட்சம் ரூபாய் பெறுமதிக்கு நேற்று முன்தினம் கொள்வனவு செய்யப்பட்டது.

## ஆஸி ஓபன் பட்டத்தை கைப்பற்றினார் ஜோகோவிச்



நோவாக் ஜோகோவிச் 3 செட்களில் டேனியல் மெட்வெடேவை வீழ்த்தி 9 ஆவது அவுஸ்திரேலிய ஓபன் பட்டம் உட்பட ஒட்டுமொத்தமாக சர்வதேச டென்னிஸ் அரங்கில் 18 ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை வென்றுள்ளார்.

நேற்று முன்தினம் மெல்பேர்னின் ரோட் லாவர் அரங்கில் நடைபெற்ற ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவின் இறுதிப் போட்டியில் ரஷ்ய வீரரான டேனியல் மெட்வெடேவ் உலக நம்பர் வன் வீரரான செர்பியாவின் நோவாக் ஜோகோவிச்சை எதிர்கொண்டார்.

சுமார் 1:53 மணிநேரம் நீடித்த இந்த ஆட்டத்தில் 7-5, 6-2, 6-2 என்ற செட் கணக்கில் டேனியல் மெட்வெடேவை தோற்கடித்தார் நோவாக் ஜோகோவிச். (4)

## ஐ.பி.எல்லில் விளையாடும் 13 தமிழக வீரர்கள்



14ஆவது ஐ.பி.எல்.20 ஓவர் கிரிக்கெட் போட்டி ஏப்ரல், மே மாதங்களில் இந்தியாவில் நடைபெறுகிறது.

இதற்கான மினி ஏலம் சென்னையில் அண்மையில் நடந்தது. இதில் 57 வீரர்கள் விலை போனார்கள். 8 அணிகளும் சேர்ந்து இவர்களை ரூ.143.69 கோடிக்கு ஏலத்தில் எடுத்தன.

இந்த ஐ.பி.எல்.போட்டியில் 13 தமிழக வீரர்கள் விளையாடுகிறார்கள்.

ஆர்.அஸ்வின், தினேஷ் கார்த்திக், வருண் சக்ரவர்த்தி, வோஷிங்டன் சுந்தர், விஜய் ஷங்கர், டி.நடராஜன், முருகன் அஸ்வின், ஜெகதீசன், சாய் கிஷோர், சந்தீப் வாரியர் ஆகியோருடன் ஷாருக்கான், ஹரி நிஷாந்த், எம்.சித்தார்த் ஆகியோர் தற்போது ஐ.பி.எல். போட்டியில் இணைந்துள்ளனர். (4)

# சுரங்கத்தில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த கோடிக்கணக்கான பணம் மீட்பு

(கொழும்பு)

பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மற்றும் போதைப் பொருள் தடுப்பு பிரிவினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பில் நிலக்கீழ் சுரங்கத்தில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த கோடிக்கணக்கான பணத்தை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

போதைப்பொருள் வர்த்தகர்களினால் இந்த பணம் பதுக்கி வைப்பட்டிருக்கலாம் எனவும், நாளாந்தம் குறைந்தபட்சமாக மூன்று கோடி ரூபாவுக்கும் மேற்பட்ட பணம் இவ்வாறு பதுக்கப்படுவதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

நாட்டில் போதைப்பொருள் விற்பனை செய்யும் பணத்தை வங்கிகளில் வைப்பிலிடும் கணக்குகளை தேடி விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதனால் அவர்களால் வங்கிகளில் பணம் வைப்பிலிட முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.

இதற்கு முன்னர் சட்டவிரோத மாக வெளிநாடுகளுக்கு பணம் கொண்டு செல்லப்பட்ட போதிலும் அண்மைய காலமாக அந்த நடவடிக்கையும் முடியாமல் போயுள்ளது.

நாட்டில் போதைப் பொருளுக்கு அடிமையானவர்கள் இலட்சக்கணக்கில் உள்ளனர். அவர்களுக்கு நாள் ஒன்றுக்கு 3 கிலோகிராம் வரையான போதைப் பொருள் தேவைப்படுவதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. (நி-4)

## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின் ஆசிரியர்
திருமதி கிருபாகரி இளங்கோவன்
அவர்களின் அன்புச் சகோதரி
திருமதி
**ஜெயப்பிரபா குகானந்தன்**
அவர்கள் இறையடி சேர்ந்ததையடுத்து அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆழ்ந்த துயரத்துடன்
யா/பெரியபுலம் ம.வி. ஆசிரிய நலன்புரிக் கழகம்

(5880)

## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்
**துரைராசா வியாழாச்சி**
(துரையம்மா)

பிறப்பு 15.06.1940
இறப்பு 13.03.2018

மூன்று ஆண்டுகள் கடந்து விட்டது அம்மா
முந்நூறு ஆண்டுகளாக உணர்கிறோம்
அன்பின் அடையாளமாய் இருந்தீர்கள்
ஏனோ எமைத் தவிக்க விட்டுச் சென்றீர்கள்

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

உடுவில் தெற்கு, புதுமடம், மானிப்பாய். (C-1503) குடும்பத்தினர்

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு 021 221 7603, 021 567 1532

## கண்ணீர் அஞ்சலி



மூளாய் வதிரன்புலோ ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தான பரிபாலன சபை மற்றும் மூளாய் இந்து இளைஞர் மன்ற முன்னாள் தலைவர் எமது நண்பன்
திரு. கா. பார்த்திபனின்
அன்புத் தாயார்
"ஆயிரம் பிறை கண்ட அன்னை"
அமரர் திருமதி
**மகாலட்சுமிப்பிள்ளை கார்த்திகேசு**
அவர்களின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்கள்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

மண்ணில் 09.08.1940
விண்ணில் 16.02.2021

(C-1506)
மூளாய்.
தங்க முகுந்தன், த.சுகந்தன், த.அகிலன்

## 01 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**திரு. செல்லையா சிவதாசன்**
(சன்லைற் றைக்கிளீனர்ஸ் முகாமையாளர்)



ஆண்டு ஒன்று ஆனாலும் அனுதினம்
அணைத்த படியே உள்ள உம் நினைவுகள்
கருவினில் சுமக்கவில்லை
எம்மை கருவிழியாய் சுமந்தவர் நீங்கள்
காற்றுக்கூட காயப்படுத்தாமல்
எம்மை காத்தவர் நீங்கள்

எம் கனவுகளை நனவாக்கிடவே
ஓடியது உம் கால்கள்
எல்லோர்க்கும் ஏணிப்படியாய் நின்று
பலரின் எதிர்காலத்தை வளரச் செய்தீர்
உமக்கு ஈடுஇணை இல்லை இந்த பிரபஞ்சத்தில்

பலகோடி ஆண்டுகள் சென்றாலும்
மாறாது ஐயா உம்மீது நாம் கொண்ட பாசம்
உயிர் மூச்சு உள்ளவரை
எமக்குள்ளே நீர் வாழ்வீர் எம் சாமியாய்

பிறப்பு 24.02.1959
இறப்பு 05.03.2020

புங்கங்குளம், அரியாலை. குடும்பத்தினர்

(5876)

# தேசியக்கொடியை அரைக்கம்பத்தில் பறக்கவிடுக - சிவாஜி அழைப்பு

(அராலி)

தேசியக் கொடிகளை அரைக் கம்பத்தில் பறக்கவிட்டு ஐ.நா.வின் கவனத்தை ஈர்ப்போம் என புலம்பெயர் உறவுகளுக்கு சிவாஜிலிங்கம் அழைப்பு விடுத்துள்ளார்.

ஐரோப்பா மற்றும் வட அமெரிக்க நாடுகளில் வாழும் தமிழ் புலம்பெயர் உறவுகள் தமது நாட்டின் தேசியக் கொடிகளை அரைக்கம்பத்தில் பறக்க விட்டு ஈழத்தில் நடந்த இனப்படுகொலைக்கு நீதி கேட்டு போராடுவோம் என முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் சிவாஜிலிங்கம் கோரிக்கை விடுத்தார்.

யாழ்பாடி தனியார் விருந்தினர் விடுதியில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை தொடர்பில் ஐ.நா.சபை ஐ.நா.மனித உரிமை பேரவையினால் வெளியிடப்பட்ட வரைவு அறிக்கையில் இலங்கை அரசாங்கத்துக்கு ஆதரவாக இடம்பெற்ற விடயங்கள் தொடர்பில் தமிழ் மக்கள் ஏமாற்றம் அடைந்துள்ளதோடு கவலையும் அடைந்துள்ளனர்.

இலங்கையில்இறுதிப்போரில் இடம்பெற்ற இனப் படுகொலைகளுக்கு நீதி வேண்டி தமிழ் சமூகம் போராடி வரும் நிலையில் ஐ.நா.சபை தமக்கு நீதியைப் பெற்றுத்தரும் என்ற நம்பிக்கையில் உள்ளனர்.

இலங்கை அரசாங்கத்தை திருப்திப்படுத்தும் வகையில் வெளியிடப்பட்டுள்ள வரைவு அறிக்கை தொடர்பில் புலம்பெயர் நாடுகளில் வாழும் தமிழ் உறவுகள் தமது நாடுகளின் கவனத்தை ஈர்ப்பதற்காக தங்கள் நாட்டு கொடிகளை அரைக் கம்பத்தில் பறக்க விட்டு போராட்டத்தில் இறங்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (5-4-104)

# பேராசிரியர் துரைராஜா ஞாபகார்த்த தங்கப் பதக்கப் பரிசில்கள் இடைநிறுத்தம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் பொதுப் பட்டமளிப்பு விழாவில் வழங்கப்படும் பேராசிரியர் அ.துரைராஜா ஞாபகார்த்த தங்கப் பதக்கப் பரிசில்கள் இம்முறை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண பல்கலைக் கழகத் துணைவேந்தரின் ஊடகப் பிரிவு இந்த தகவலைத் தெரிவித்துள்ளது.

யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் அ.துரைராஜா ஞாபகார்த்தமாக பீடமட்டத்திலும் பல்கலைக்கழக மட்டத்திலும் கல்வி, விளையாட்டு, கலை கலாசாரம் உட்பட சகலதுறைகளிலும் சிறந்த மாணவர் ஒருவருக்குத் தங்கப் பதக்கம் வழங்கப்படுவது வழமையாகும்.

இம்முறை கலைப்பீட மட்டத்தில் சகல துறைகளிலும் சிறந்த மாணவருக்கான பேராசிரியர் அ. துரைராஜா ஞாபகார்த்த தங்கப் பதக்கம், பல்கலைக்கழக மட்டத்தில் சகல துறைகளிலும் சிறந்த மாணவருக்கான பேராசிரியர் அ. துரைராஜா ஞாபகார்த்த தங்கப் பதக்கம் ஆகிய விருதுகளுக்காக கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்களின் அடிப்படையில் ஊடகத் துறையைச் சேர்ந்த மாணவன் ஒருவருக்கு சிறந்த மாணவருக்கான பல்கலைக் கழக மட்ட விருது வழங்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது.


அதன்பின்னர், மெய்யியல் துறை மாணவன் ஒருவரிடமிருந்து துணைவேந்தருக்குக் கிடைத்த மேன்முறையீட்டின் அடிப்படையிலும், ஆதாரங்களின் அடிப்படையிலும் விசேட மூதவைக் கூட்டம் கூட்டப்பட்டு மெய்யியல் துறை மாணவன் விருதுக்கு உரியவராக அறிவிக்கப்பட்டார்.

எனினும், மெய்யியல் துறை மாணவனுக்கு எதிராக மாணவர் தரப்பில் இருந்து மேன்முறையீடுகளும், ஆதாரங்களும், புதிய சாட்சியங்களும் கிடைத்த வண்ணம் இருப்பதனால், விருதுக்குரியவரைத் தெரிவு செய்வதற்க்கால அவகாசம் போதாமையால் விருது வழங்கல் இடைநிறுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உரிய விசாரணைகள் இடம்பெற்று பிறிதொரு விழாவில் இந்த விருது வழங்கப்படும் என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (5-4-33)




# பல இலட்சம் பெறுமதியான மீன்பிடி வலைகள் நாசம்



(கரணவாய்)

எல்லை தாண்டிய இந்திய மீனவர்களால் யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு வெற்றிலைக்கேணி மீனவர்கள் மூவரின் பல இலட்சம் பெறுமதியான மீன்பிடி வலைகள் வெட்டப்பட்டு நாசம் செய்யப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் கடலுக்கு தொழிலிற்காக சென்ற 3 மீனவர்களின் பல இலட்சம் பெறுமதியான வலைகளே இவ்வாறு இந்திய படகுகளால் துண்டாடப்பட்டு இழுத்தும் எடுத்தும் செல்லப்பட்டுள்ளன. (5-316)

# பனைசார் உற்பத்தி பொருட்களுக்கான பயிற்சி நெறி ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

கிராமிய கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் கீழ் உள்ள தேசிய அருங் கலைகள் பேரவையினால் சாவகச்சேரி-மகிழங்கேணி கிராமத்தில் பனைசார் கைப் பணிக் கைத்தொழில் பயிற்சி நெறி நேற்று திங்கட்கிழமை காலை ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மகிழங்கேணி திருவள்ளுவர் சனசமூக நிலையத்தில் இடம்பெற்ற தொழில் பயிற்சி ஆரம்ப நிகழ்வில் தேசிய அருங்கலைகள் பேரவையின் யாழ். மாவட்ட அபிவிருத்தி உதவியாளர், வடமாகாண தொழில் துறைத் திணைக்கள அபிவிருத்தி உத்தியோகத்தர், கோவிற்குடியிருப்பு கிராம பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், தென்மராட்சி பிரதேச செயலக கைத்தொழில் துறை அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் சாவகச்சேரி நகரசபை உறுப்பினர்களான தர்சன் மற்றும் சுபோதினி ஆகியோர் கலந்துகொண்டனர்.

குறித்த பயிற்சி நெறியின் ஊடாக வறுமை நிலையில் உள்ள குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தி கிராமிய பொருளாதாரத்தை மேம்படுத்த முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பயிற்சிக் காலத்தில் உற்பத்தி செய்யப்படும் பனைசார் உற்பத்திப் பொருட்களை சந்தைப்படுத்துவதற்கான வசதி வாய்ப்புக்களும் ஏற்படுத்திக் கொடுக்கப்படும் எனவும் உறுதியளிக்கப்பட்டுள்ளது. (5-4-30)





சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால் 2020 ஆம் ஆண்டு தரம்-05 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களை கௌரவிக்கும் நிகழ்வு சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் லயன் கோகுலன் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக லயன்ஸ் கழகத்தின் மாவட்ட ஆளுநர் லயன் தேசப்பண்டு எம்.ஐ.எம்.ராபீக் கலந்து கொண்டு மாணவர்களைக் கௌரவித்தார்.

(படங்கள்:-சுபேசன்)

# ஆடியபாதம் வீதி, இராமநாதன் வீதி ஊடான போக்குவரத்துகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன

(நல்லூர்)

போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்துவதற்காக எதிர்வரும் 24 ஆம், 25 ஆம் திகதிகளில் ஆடியபாதம் வீதி, இராமநாதன் வீதி ஆகியவற்றின் ஊடான போக்குவரத்துகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ் இரு தினங்களும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 35 ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா இடம்பெற இருப்பதனால், போக்குவரத்து நெரிசலைத் தவிர்க்கும் வகையில் இந்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதன் படி ஆடியபாதம் வீதி, இராமநாதன் வீதி ஆகிய இரு வீதிகளும் ஒருவழிப் பாதைப் பயணத்துக்கு மட்டுமே அனுமதிக்கப்படும்.

ஆடியபாதம் வீதியில், திருநெல்வேலிச் சந்தியில் இருந்து பிறவுண் வீதிச் சந்தி நோக்கிச் செல்வதற்கு மட்டுமே அனுமதிக்கப்படும். இராமநாதன் வீதியில் கலட்டிச் சந்தியில் இருந்து பரமேஸ்வராச் சந்தி நோக்கிச் செல்வதற்கு மட்டுமே அனுமதிக்கப்படும்.

இதேநேரம், ஆடியபாதம் வீதி, வளாக ஒழுங்கை, இராமநாதன் வீதி, புகையிரத நிலைய ஒழுங்கை ஆகிய பகுதிகளில் வாகனங்கள் தரித்து நிற்பதற்குத் தடைசெய்யப்பட்டிருப்பதுடன், பட்டமளிப்பு விழாவுக்கு வருபவர்களின் வாகனங்களை யாழ்ப்பாணம் தொழில்நுட்பக் கல்லூரி மைதானத்தினுள் நிறுத்துவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (5-4-33)

# உயிர்த்த ஞாயிறு தாக்குதல் அறிக்கை விவகாரம் அரசியல்வாதிகளை சந்திக்க மறுத்தார் பேராயர்

(கொழும்பு)

உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழு அறிக்கை தனது கைகளுக்கு கிடைக்கும் வரை தான் எந்தவொரு பாராளுமன்ற உறுப்பினரையும் சந்திக்கப்போவதில்லை என பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை தெரிவித்துள்ளார்.

ஆளும் தரப்பு மற்றும் எதிர் தரப்பைச் சேர்ந்த கத்தோலிக்க பாராளுமன்ற உறுப்பினர்கள் அடுத்த வாரம் பேராயரை சந்திக்க திட்டமிட்டிருந்தனர்.

எனினும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதிஆணைக்குழுவின் அறிக்கை தனது கைகளுக்கு கிடைக்கும் வரை பேராயர் எந்தவொரு அரசியல்வாதியையும் சந்திக்கமாட்டார் என பேராயரின் ஊடகப் பேச்சாளர் தென்னிலங்கை ஊடகமொன்றுக்கு தெரிவித்தார்.

இதேவேளை உயிர்த்த ஞாயிறு தாக்குதல் தொடர்பான ஜனாதிபதி ஆணைக்குழுவின் விசாரணை அறிக்கையை மீள் மதிப்பீடு செய்ய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் நியமிக்கப்பட்ட ஆறுபேர் அடங்கிய அமைச்சரவை குழுவை பேராயர் நிராகரித்துள்ளார். (நி-4)

# எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் புதிதாக அமைக்க ஏற்பாடு

(கொழும்பு)

இலங்கையில் புதிய எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்படவுள்ளதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் நேற்று திங்கட்கிழமை தெரிவித்துள்ளது.

அந்தவகையில் கொழும்பு, திருகோணமலை மற்றும் அம்பாந்தோட்டை ஆகிய இடங்களில் குறித்த சுத்திகரிப்பு நிலையங்கள் அமைக்கப்படும் என இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை - சப்புகஸ்கந்தை மற்றும் கொழும்பில் அமையவுள்ள எண்ணெய் சுத்திகரிப்பு நிலையங்கள் நாட்டின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக அமைக்கப்படவுள்ளதாக தெரிவித்தார்.

மேலும் மீள் ஏற்றுமதி நோக்கங்களுக்காக இரண்டு துறைமுகங்களில் சுத்திகரிப்பு நிலையங்கள் கட்டப்படும் என்றும் இதற்கு பெரிய அளவிலான உள்கட்டமைப்பு மேம்பாடு தேவைப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அந்தவகையில் இந்த திட்டத்திற்கு 100 ஏக்கர்களை முதல் கட்டமாக பயன்படுத்த துறைமுகங்களுடன் ஒரு ஒப்பந்தம் எட்டப்பட்டுள்ளதாக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார். (நி-4)

# வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கும் கொரோனா தடுப்பூசி

(கொழும்பு)

இலங்கையில், வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு கொவிட்-19 தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கான ஆப்கானிஸ்தான் தூதுவர் அஷ்ராப் ஹய்டாரி தான் நேற்று கொவிட் தடுப்பூசி பெற்றுக்கொண்டதாக டுவிட்டரில் பதிவிட்டுள்ளார். இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லேயும் தடுப்பூசி பெற்றுக்கொண்டுள்ளார்.

சுகாதார முன்னரங்கப் பணியாளர்களுக்கு முதல் கட்டமாக தடுப்பூசிகள் வழங்கப்பட்டிருந்ததுடன் அதன் பின்னர் பாராளுமன்ற உறுப்பினர்கள், அதிக ஆபத்தான வலயங்களைச் சேர்ந்த மக்கள் என பல்வேறு தரப்பினருக்கும் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# நீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துங்கள்

(கொழும்பு)

தற்போது நிலவி வரும் வரட்சியான காலநிலை காரணமாக சில பகுதிகளுக்கு நீர் வெட்டு மற்றும் குறைந்த அழுத்தத்தில் நீர் விநியோகம் வழங்கப்பட்டு வருகின்றது.

எனவே தண்ணீரைச் சிக்கனமாகப் பயன்படுத்துமாறு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபையினால் பொதுமக்களுக்கு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (நி-4)


**PEARSON** INTERNATIONAL COLLEGE

Diploma in English
IELTS Acadamic
IELTS General
IELTS Life skills.

# Weekday classess
# Weekend Classess
# Personal Classes
# Group Classes
# Lecturers are above band 8 years and professionally qualified

98% Students in IELTS Scored above 6.5
Learn the techiniques to score above 6.0
Unbeatable Success rate in Northern Province

Registered Exam Centre for IELTS
Special discounts for upcoming registration
074 188 7878 infopearsonicollege@gmail.com
idp IELTS
(5417)

No.21,Ponnampalam Street 3rd lane, Power house road, Jaffna



**கல்யாணமாலை**

**சர்வதேச திருமண சேவை**

**இவர்களுக்கு மணமகள் தேவை**

பிறப்பு: 1987 இந்து நட்சத்திரம்: அச்சுவினி
கி.பா: 56 3/4செவ் 12 சூரி1 இல் உயரம்:5'7"
தகைமை/தொழில்: B.A பட்டதாரி நிரந்தர ஆசிரியர்
எதிர்பார்ப்பு:தகுந்ததொழில் ஆசிரியர் விரும்பத்தக்கது பட்டதாரிப்பெண், உள்நாடு மட்டும்
தொ.இ: B/11489

பிறப்பு:1981 இந்து நட்சத்திரம்: பரணி
கி.பா: 8செவ் 2 சூரி 4 இல் உயரம்: 5'8"
தகைமை/தொழில்:க.பொ.த.சா கமம் (சொந்தம்)
எதிர்பார்ப்பு:சாதாரண படித்த பெண். உள்நாடு மட்டும்
தொ.இ: B/11490

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: கேட்டை, 3 ஆம் பாதம்.
கி.பா:-செவ் 8 சூரி 7 இல் உயரம்:6.1
தகைமை/தொழில்: க.பொ.த. உ. கணிதம், Information Technology
எதிர்பார்ப்பு:அரச உத்தியோகம்,ஆசிரியர் விரும்பத்தக்கது.வெளிநாடு,உள்நாடும் விரும்பத்தக்கது.
தொ.இ: B/11493

பிறப்பு:1987 இந்து நட்சத்திரம்: பரணி
கி.பா: 36 3/4செவ் 3சூரி 2 இல் உயரம்: 6'2"
தகைமை/தொழில்:க.பொ.த. c. Restaurant Work, சுவிஸ்
எதிர்பார்ப்பு: மணமகனுக்கு சுவிஸ் நாட்டு விசா இல்லை. மணமகள் விசாவுடன் எதிர்பார்க்கப்படுகிறது.
தொ.இ: B/11494

**இவர்களுக்கு மணமகன் தேவை**

பிறப்பு: 1987 றோமன் கத்தோலிக்கம்
நட்சத்திரம்: கார்த்திகை 1ம் பாதம்
கி.பா: செவ் 6 சூரி 7 இல் உயரம்:5.4
தகைமை/தொழில்:. Degree Computer Science, அரச உபதபால் அதிபர்
எதிர்பார்ப்பு: பட்டதாரி,வெளிநாட்டும் எதிர்பார்க்கப்படுகிறது
தொ.இ:G/11519

பிறப்பு: 1995 இந்து
நட்சத்திரம்: திருவாதிரை
கி.பா:28 1/2செவ் 5 சூரி12இல் உயரம்:5'4"
தகைமை/தொழில்:G.C.E A/L,Jaffna National College of Education Diploma நிரந்தர ஆசிரியர்
எதிர்பார்ப்பு: பட்டதாரி, வங்கி, எஞ்சினியர், வெளிநாடும் விரும்பத்தக்கது.
தொ.இ:G/11521

பிறப்பு:1973 இந்து நட்சத்திரம்: அவிட்டம்
கி.பா:-செவ் 10சூரி 11 இல் உயரம்:5'2"
தகைமை/தொழில்:A/L,Audit , Executive Officer G.O.V
எதிர்பார்ப்பு: நற்பண்புடைய நிரந்தரதொழில், வெளிநாடும் விரும்பத்தக்கது
தொ.இ:G/11529

பிறப்பு: 1979 இந்து நட்சத்திரம்:கார்த்திகை
கி.பா:செவ் 2 சூரி6 இல் உயரம்:5'3"
தகைமை/தொழில்: G.C.E A/L, Computer Operator , நிரந்தரவேலை
எதிர்பார்ப்பு: நல்ல குணமுடைய நிரந்தர வேலை உடையோர். வெளிநாடும் விரும்பத்தக்கது.
தொ.இ:G/11530

**கல்யாணமாலை**
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.



**மணிவிழா நாயகியை வாழ்த்துகின்றோம்**



திருமதி.
**கணேஸ்வரி கஜேந்திரன்**
(பயிற்றப்பட்ட ஆரம்பக் கல்வி ஆசிரியர்)

எமது பாடசாலையில் சேவையாற்றி 29.05.2020 அன்று ஓய்வு பெற்ற திருமதி கணேஸ்வரி கஜேந்திரன் அவர்கள் தனது ஓய்வுக்காலத்தில் சிறப்புடன் வாழ வாழ்த்தி நிற்கின்றோம்

Best Wishes

**சேவை விபரம்**

16.10.2000-12.12.2000
கிளி/ஸ்கந்தபுரம் இல-1 அ.த.க. பாடசாலை
10.01.2001-25.06.2002
மன்/கௌரியம்பாள் அ.த.க. பாடசாலை
26.06.2002-31.06.2004
மட்/அரசினர் ஆசிரியர் கலாசாலை
01.07.2004-09.03.2012
மன்/கௌரியம்பாள் அ.த.க.பாடசாலை
12.03.2012-08.06.2012
யா/கோப்பாய் வடக்கு றோ.க.த.க. பாடசாலை
11.06.2012-29.05.2020
யா/ஸ்ரீசோமாஸ்கந்த இந்து ஆரம்பப்பாடசாலை

(5867)

ஆசிரியர் நலன்புரிக்கழகம்
யா/ஸ்ரீ சோமாஸ்கந்த இந்து ஆரம்பப்பாடசாலை, புத்தூர்.

# மரக்கடத்தல் முறியடிப்பு

## ஒருவர் கைது



(தருமபுரம்)

கிளிநொச்சி மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கமைய தருமபுரம் கல்மடு நாவல் நகர் பகுதியில் நேற்று அதிகாலை மேற்கொண்ட சுற்றிவளைப்பில் சட்டவிரோதமான முறையில் மரக்கடத்தலில் ஈடுபட்ட நபரொருவர் கைது செய்யப்பட்டார்.

அவரிடமிருந்து மரக்கடத்தலுக்கு பயன்படுத்திய உழவு இயந்திரமும் வெட்டப்பட்ட சுமார் 3 இலட்சம் பெறுமதியான 21 பாலை மரக்குற்றிகளும் கைப்பற்றப்பட்டன.

கைது செய்யப்பட்டவர் மேலதிக விசாரணைக்காக தருமபுரம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார் என மது ஒழிப்பு பிரிவு பொறுப்பதிகாரி டி.எம்.சதுரங்க தெரிவித்தார். (5-4-316)

# வீதிகளில் காணப்படும் குழிகளால் போக்குவரத்து சேவை இடைநிறுத்தம்

(அக்கராயன்)

பேருந்து சேவை நிறுத்தப்பட்டமையால் மாணவர்கள் பாடசாலைக்கு செல்லும் வீதம் குறைவடைந்துள்ளது.

பூநகரி அரசபுரம் ஊடாக முக்கொம்பன் மகா வித்தியாலயத்திற்கு இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்து சேவை நடைபெற்று வந்தது.

கடந்த இரு மாதங்களாக அரசபுரத்திற்கும் முக்கொம்பனுக்கும் இடையிலான எட்டு கிலோ மீற்றர் வீதியில் மூன்று இடங்களில் பெரும் குழிகள் காணப்படுவதால் இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்து சேவை இடம் பெறவில்லை.

இலங்கை போக்குவரத்து சபை குறித்த மூன்று குழிகளையும் மூடித் தருமாறு கோரியிருந்தது. ஆனால் மூன்று குழிகளும் இதுவரை மூடப்படவில்லை.

இதன் காரணமாக அரசபுரத்தில் இருந்து முக்கொம்பன் மகா வித்தியாலயத்திற்கு வருகின்ற மாணவர்கள் போக்குவரத்து நெருக்கடியினை எதிர்கொண்டுள்ளதாக பெற்றோர்களினால் தெரிவிக்கப்படுகிறது.

அரசபுரம் வீதியில் காணப்படுகின்ற குழிகளை மூடி இலங்கை போக்குவரத்து சபையின் பேருந்து சேவை இடம் பெறுவதற்கு ஒத்துழைப்பு வழங்கும்படியும் பெற்றோர்களினால் உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதுடன் மாணவர்களினதும் பொதுமக்களினதும் நன்மை கருதி விரைந்து செயற்படுமாறும் அரசபுரம் செக்காலைப் பகுதி மக்கள் கேட்டுக் கொண்டனர். (5-4-350)






மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தினால் மன்னார் வலயக் கல்விப் பணிமனைக்குட்பட்ட உயிலங்குளம் றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை, சிவராஜா இந்து மகா வித்தியாலயம் மற்றும் மடுக்கரை அரசினர் தமிழ் கலவன் பாடசாலைகளுக்கு கொரோனாத் தொற்றிலிருந்து பாதுகாப்பதற்குத் தேவையான தொற்று நீக்கும் பொருட்கள் வழங்கப்பட்டன. (படம்:-ஜோசப் நயன்)

# பொதுமக்களுக்கும் பொலிஸாருக்குமிடையில் இருக்கும் இடைவெளி குறைக்கப்பட வேண்டும்

(அக்கராயன்)

சட்டங்கள் தொடர்பாக பொலிஸார் விளக்கமளிக்க வேண்டும் என முல்லைத்தீவு சிவில் சமூக பெண்கள் அமைப்பு முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் கடிதம் ஒன்றைக் கடந்த வாரம் கையளித்துள்ளது.

சமூகத்தில் நடைபெறுகின்ற குற்றச் செயல்களை எவ்வாறு சமூக அமைப்புகள் அணுக வேண்டும். சட்டம் தொடர்பான விழிப்புணர்வு மக்கள் மத்தியில் குறைந்து காணப்படுகிறது.

பொலிஸாருக்கு பொது மக்கள் எவ்வாறு ஒத்துழைப்பு வழங்குதல் போன்ற பல்வேறு இடைவெளிகள் பொலிஸாருக்கும்பொதுமக்களுக்கும்இடையே காணப்படுகின்றன.

எனவே இவை தொடர்பான விளக்கங்களை பொதுமக்களுக்கு மத்தியில் பொலிஸார் வழங்க வேண்டும். பொலிஸார் வழங்குகின்ற விழிப்புணர்வுகள் சமூகத்தில் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும்.

இதனை விட சமூக வன்முறைகள், குடும்ப வன்முறைகள் குறிப்பாக பெண்கள், சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பாக பொலிஸார் மக்கள் மத்தியில் விழிப்புணர்வினை ஏற்படுத்த வேண்டும்.

சட்ட விரோத மதுபான உற்பத்தி உட்பட சமூக சீர்கேடுகள் தொடர்பான சட்டங்கள் பொது மக்கள் மத்தியில் குறைவான விழிப்புணர்வே காணப்படுகின்றமையினால் இவை தொடர்பாக பொலிஸார் மக்கள் மத்தியில் விழிப்புணர்வுச் செயற்பாட்டினை ஏற்படுத்துங்கள் என முல்லைத்தீவு சிவில் சமூக பெண்கள்அமைப்புமுல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் கடிதம் கையளித்துள்ளது.(5-4-350)

# இலவச கல்வி நிலையம் திறந்து வைப்பு



(நெளுக்குளம்)

"வாகை" இலவசக் கல்வி நிலையை திறப்பு விழா நிகழ்வு வவுனியா சிதம்பரபுரம் பகுதியில் நேற்று முன்தினம் இடம் பெற்றது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி உறுப்பினர் தவபாலன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் செ.கஜேந்திரன் ஆகியோர் கல்வி நிலையத்தை நாடாவெட்டி திறந்து வைத்தனர்.

இத்தாலிவாழ் தமிழ் உறவுகளின் நிதிப்பங்களிப்பில் அமைக்கப்பட்டு நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் பிரதேச சபை உறுப்பினர் ஐ.செல்வநாயகம், கிராம அபிவிருத்திச்சங்க தலைவர் இ.சௌந்தர்ராச், பொதுமக்கள், மாணவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (5-4-299)

# முல்லைத்தீவு உப்புமாவெளியில் தொடரும் மணல் அகழ்வுகள்


(அக்கராயன்)

முல்லைத்தீவு கரைதுறைப்பற்றின் உப்புமாவெளி கிராம உத்தியோகத்தர் பிரிவில் தொடர்கின்ற மணல் அகழ்வினை கட்டுப்படுத்தும்படி அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

2004 ஆம் ஆண்டு ஆழிப் பேரலை முல்லைத்தீவினை தாக்கிய போது உப்புமாவெளிப் பகுதியில் காணப்பட்ட மணல் திட்டுகள் காரணமாக கடல் நீர் கிராமங்களுக்குள் புகுந்து கொள்ளவில்லை.

ஆனால் குறித்த மணல் திட்டுகளே தற்போது தொடர்ச்சியாக மணல் அகழ்வுக்குட்படுத்தப்படுகின்றன. இதன் காரணமாக எதிர்காலத்தில் கடல் நீர் கிராமங்களுக்குள் உட்புகக்கூடிய அபாயம் காணப்படுகிறது.

அண்மையில் நடைபெற்ற கரைதுறைப்பற்று பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் மக்கள் பிரதிநிதிகளினால்



இவ்விடயம் சுட்டிக்காட்டப்பட்ட போது ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரினால் குறித்த பகுதியில் மணல் அகழ்வினைக் கட்டுப்படுத்துமாறு பிரதேச செயலாளருக்கு உத்தரவுகள் வழங்கப்பட்டன.

எனினும் உப்புமாவெளி, உடுப்புக்குளம் பகுதிகளில் தொடர்ச்சியாக மணல் அகழ்வு நடைபெறுகின்றது.

தொடர்ச்சியாக டிப்பர்களில் வெளிமாவட்டங்களுக்கு மணல் கொண்டு செல்லப்படுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

முல்லைத்தீவு மாவட்டச் செயலகம் இப்பகுதியில் நடைபெறுகின்ற மணல் அகழ்வினைக் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் இப்பகுதி பொது அமைப்புகள் கோரிக்கை விடுத்துள்ளன. (5-4-350)

# இராசிபலன்

23.02.2021
மாசி 11, செவ்வாய்க்கிழமை
ஏகாதசி பிற்பகல் 4.16 மணிவரை
திருவாதிரை முற்பகல் 10.52 மணிவரை
சுபநேரம் 11.00- 12.30 மணிவரை
இராகுகாலம் 3.30-5.00 மணிவரை
சந்திராஷ்டமம்: கேட்டை, மூலம்
பீம ஏகாதசி விரதம்

வளவன்


மேஷம்

வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், செய்தொழிலில் முன்னேற்றம் காண்பீர்கள், நீண்டநாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம்.


ரிஷபம்

நிதி நிலை உயர வழிவகை செய்வீர்கள், பொது வாழ்வில் புகழ்கூடும் நாள், வாய்ப்புக்கள் உங்களை நாடி வரலாம், வாக்கு மேன்மையுண்டு, போசன சுகமுண்டு.


மிதுனம்

இறைவழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், குடும்பச் செலவுகளில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள், போசன சுகமுண்டு, மன ஆறுதல் தரும் வகையில் பயணமொன்று உருவாகலாம்.


கடகம்

எதிர்பாராத திருப்பங்கள் ஏற்படலாம், குடும்பத்தினர்களை அனுசரித்துச் செல்வீர்கள், தொழில் நலன்கருதிய பயணங்கள் இடம்பெறலாம், வழிபாடு ஆனந்தம் தரும்.


சிம்மம்

குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காண்பீர்கள், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள்.


கன்னி

அன்பு நண்பர்கள் ஆர்வத்தோடு உதவ முன்வருவர், கனவு பலிதமுண்டு, எதிலும் உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், போசன சுகமுண்டு.


துலாம்

பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், தொழில் வளர்ச்சிக்கு குறுக்கீடாக இருந்தவர்கள் விலகுவர், உறவினர்கள் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும், பயணங்களால் பலனுண்டு.


விருச்சிகம்

சிந்தித்துச் செயற்பட்டு சிறப்புக்களைக் காணும் நாள், வரவும் செலவும் சமமாகும் நாள், வழிபாடு குதூகலம் தரும், மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும்.


தனுசு

குடும்ப நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், உறவினர் சிலரை தேடிச்சென்று சந்திப்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், போசன சுகமுண்டு.


மகரம்

உற்சாகத்துடன் பணிபுரிவீர்கள், மறைமுக எதிர்ப்புக்கள் மாறும், பாக்கிகள் வசூலாகும் வாய்ப்புண்டு, செய்தொழிலில் மேன்மையுண்டு, காரிய அனுகூலமுண்டு.


கும்பம்

வளர்ச்சிப் பாதையை நோக்கி நகர்வீர்கள், உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், சுப செய்திகள் வந்து சேரலாம், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.


மீனம்

எதிர்பார்ப்புகள் நிறைவேறும் நாள், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், பயணங்களால் பலனுண்டு, புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், நண்பர்கள் சந்திப்புண்டு.

குறைவாகப் பேசு, அதிகம் சிந்தி

# வடக்கிலுள்ள தீவுகளை எந்த நாட்டிற்கும் வழங்கப் போவதில்லை - டலஸ்

(கொழும்பு)

**வடக்கில் உள்ள தீவுகளை எந்த நாட்டிற்கும் வழங்கப்போவதில்லை என மின்சக்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.**



யாழ்ப்பாணத்தின் நெடுந்தீவு, நயினாதீவு மற்றும் அனலைதீவு ஆகிய தீவுகளுக்கு தற்போது டீசல் மூலமே மின்சாரம் உற்பத்தி செய்யப்பட்டு விநியோகிக்கப்படுகிறது.

இந் நிலையில் அங்கு காற்றாலை மற்றும் சூரிய ஒளி மின்சார உற்பத்தி திட்டத்தை முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் 12 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியுடன் சீனாவின் பங்களிப்புடன் குறித்த திட்டத்தை முன்னெடுப்பதற்கான நடவடிக்கையை அரசாங்கம் எடுத்திருந்தது.

இதேவேளை இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே, வடக்கில் இந்த திட்டத்திற் காக 12 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியை நன்கொடையாக இலங்கைக்கு வழங்குவதாக அரசாங்கத்திடம் அறிவித்திருந்தார்.

இந்நிலையில் இந்த விவகாரம் குறித்து அரசாங்கம் இன்னும் முடிவு செய் யவில்லை என்றும் மக்களின் நலன்களை கருத்திற்கொண்டு முடிவு எட்டப்படும் என்றும் மின்சக்தி அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்தார், (நி-4)

## கண்ணீர் அஞ்சலி

அன்னை பிதாகுருவானான் எங்கள் குருநாதன்
அவனியெல்லாம் ஆள வைத்தான் எங்கள் குருநாதன்



மூளாய் வதிரன்புலோ ஸ்ரீ
சித்திவிநாயகர் தேவஸ்தான
ஆஸ்தான வித்துவான்
அருமைத்தம்பி
திரு இராம.சிவகுமார் அவர்களின்
அன்புத் தாயார்
"ஆயிரம் பிறை கண்ட அன்னை"
அமரர் திருமதி
பவானியம்மா இராமமூர்த்தி
அவர்களின் மறைவுக்கு
எமது ஆழ்ந்த அனுதாபங்கள்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி !!!

மண்ணில் 04.07.1936
விண்ணில் 19.02.2021

மூளாய்
தங்க முகுந்தன்
நவராத்திரி உபயகாரர் சார்பாக

(C-1506)

## 16 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 17.05.1954
மறைவு 19.02.2005

அமரர்
**கருணைவேல் தேவநாயகி**

(C-1505)

பதினாறு ஆண்டுகள் கழிந்தாலும் ஓவியமாய் பதிந்திருக்கிறது
உங்கள் முகம்! காவியமாய் வாழ்ந்தீர்கள்
உம்மை காலமெல்லாம் நினைத்திருப்போம்
தேனினிய உங்கள் குணம் தேடி நாம் உருகுகின்றோம்
ஆண்டவன் காலடியில் உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்

துவாளி வீதி,இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி (அருண்சோ மில் உரிமையாளர்)

கணவர்- கருணைவேல்
பிள்ளைகள்- அரும்செல்வி,
சந்திரிகா, ஜனகன்



# சிறுவர் அரங்கம்

## சொர்க்கத்தில் தாடி, மீசை வளருமா?

அமைச்சரவை கூடியதும், பீர்பாலிடம் மன்னர் விசயத்தைக்கூறி, "இந்த காரியத்தை நல்ல முறையில் செய்து முடிக்க தங்களைவிட சிறந்தவர் யாருமில்லை, தாங்கள் சொர்க்கத்திற்கு சென்று என் தந்தையின் நிலையறிந்து வருக!" எனக்கூறினார்.

ஒரு விநாடி அதிர்ந்த பீர்பால் இவை பொறாமைக் காரர்களின் சதி என்பதை நொடிப்பொழுதில் உணர்ந்து மன்னரிடம், "மன்னா தங்கள் ஆணையை ஏற்று நான் செயற்பட எனக்கு மூன்று மாத அவகாசம் வேண்டும்.

அந்தச்சமயம் நான் தங்களை சந்திக்க இயலாது. மேலும் என்குடும்பத்துக்கு நான் ஆற்றவேண்டிய சில கடமைகளை அதற்குள் முடித்தபின், நீங்கள் செல்லப் பணித்த சொர்க்கம் சென்று வருகிறேன்" என்று கூறி, மன்னரின் சம்மதம் பெற்று வெளியில் வந்து, யோசித்தார்.

மூன்றுமாதம் கழித்து பீர்பால் மன்னரிடம் நான் தயார் என்றுகூற, முடிதிருத்துபவன் கூறிய மந்திரவாதி மூட்டிய சுடுகாட்டுத் தீயில், பீர்பாலை எரிக்க, அதில் சூழ்ந்த புகை மூட்டத்தில் பீர்பால் யாரும் அறியா வண்ணம், தான் ஏற்கனவே செய்துவைத்திருந்த சுரங்கப்பாதையின் வழியே அருகிலுள்ள காட்டை அடைந்து அங்கிருந்து தன் வீட்டுக்கு சென்று மறைந்து கொண்டார்.



கழிந்தது ஆறுமாதம். இதற்குள் சுடுகாட்டு நெருப்பில் ஒழிந்தான் பீர்பால். இனிநாம் அவன் இடையூறின்றி மன்னரிடம் செல்வாக்கு பெறலாம் என அமைச்சர்கள் எல்லாம் மனப்பால் குடித்தனர்.

ஒருநாள் வயதான சாமியார் அரசவைக்கு வந்தார், மன்னரிடம்சென்று "மன்னா, நான்தான் பீர்பால், தங்கள் தந்தையை சொர்க்கத்தில் சந்தித்துவிட்டு நேராக இங்கே வருகிறேன். இந்த ஓலையைத் தந்தை தங்களிடம் அளிக்கச் சொன்னார் என்று கூற, ஓலையில் மகனே எனக்கு தாடியும் மீசையும் வளர்ந்து அதை சரிசெய்ய முடிதிருத்துவோர் யாருமில்லை நீ நமது அரண்மனை முடிதிருத்துபவனை உடனே அனுப்பிவை.!" என்றிருந்தது. படித்தபின் மன்னர், மாமன்னரான எனது தந்தை வாடுவதா என அரண்மனை முடி திருத்துவோனை அழைத்து விபரம் கூறி, உடனே சொர்க்கத்திற்கு செல்லக் கூற, அவன் "தொபுக்கடீர்" என மன்னர் காலில் விழுந்தான். "பொருளுக்கு ஆசைப்பட்டு அமைச்சர்கள் சொன்ன சதிச்செயலில் ஈடுபட்டுவிட்டேன்.. என்னை மன்னித்து விடுங்கள் மன்னா! எனக் கதறினான். யோசித்த மன்னர் மனிதர்களால் எப்படி இந்த உடம்புடன் சொர்க்கத்திற்கு சென்று திரும்பிவர முடியும். இது பீர்பாலைக் கொல்ல அமைச்சர்கள் செய்த சதிதான் என்று உணர்ந்து, பொறாமைக்கார அமைச்சர்களையும், பேராசை கொண்ட முடி திருத்துபவனையும் சிறையில் அடைக்க உத்தரவிட்டார். சதியால் நண்பனை இழக்க இருந்தேனே என்று வருந்தி, பீர்பாலை கட்டித்தழுவினார். (முற்றும்)

# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## சிரஞ்சீவி அலெக்சாண்டர்

எத்தனையோ நாள் மயக்கம். அன்று அதிகாலை அலெக்சாண்டருக்கு விழிப்பு வந்தது. எதிரே அவருடைய மனைவி ராக்சேனா, நண்பர்கள் தொலமி மற்றும் செலூகஸ் உள்ளிட்டோர் நின்றிருந்தார்கள்.

செலூகஸின் கைகளைப் பிடித்துக்கொண்டார் அலெக்சாண்டர். எனக்கு ஒரு உதவி செய்ய முடியுமா செலூகஸ்?

குரல் கம்மியிருந்தது அலெக்சாண்டருக்கு. எல்லோருடைய கண்களில் இருந்தும் நீர் கசிந்தது. உத்தரவிடுங்கள் அரசே, அதற்காகவே காத்துக் கொண்டிருக்கிறோம்.




திணறித்திணறிப் பேசினார் அலெக்சாண்டர். என்னுடைய கைகள் வெளியே தெரியும்படி கல்லறையில் என்னைப் புதைக்க வேண்டும். யாரிடமிருந்தும் பதிலில்லை. வாய் விட்டு அழத் தொடங்கியிருந்தார்கள்.

செய்வீர்களா கேட்டார் அலெக்சாண்டர்.

செ... செய்கிறோம். உடைந்த குரலில் பதில் வந்தது. அலெக்சாண்டருக்கு தெரியாதது தோல்வியின் ருசி. எதையுமே வெற்றியாகப் பார்த்து மட்டுமே பழகியவர். முதன் முறையாக மரணத்திடம் கொஞ்சம் கொஞ்சமாக தோற்றுக் கொண்டிருந்தார். போராட்டம் போதும் என்று தோன்றிய நொடியில் தன்னுயிரை வெளியேற அனுமதித்தார்.

அலெக்சாண்டரின் கடைசி ஆசை இது தான். இந்தக் கல்லறையில் உறங்குபவன் உலகையே வென்றவன் என்று பொறித்து விடுங்கள்.

ஆனாலும் போகும் போது எதையும் எடுத்துச் செல்லவில்லை என்று எல்லோரும் தெரிந்து கொள்ளவே கைகள் வெளியே தெரிய வேண்டும். (முற்றும்)

# அடுத்த வருடத் தொடக்கத்தில் கொவிட் தாக்கம் முடிவடையும்

## உலக சுகாதார ஸ்தாபனம் நம்பிக்கை

(ஜெனிவா)

கொரோனா வைரஸ் பரவலானது 2022 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் முடிவடையும் என்று தான் நம்புவதாக ஐரோப்பாவிற் கான உலக சுகாதார அமைப்பின் பிராந்திய இயக்குநர் ஹான்ஸ் க்ளுக் நேற்று முன்தினம் தெரிவித்தார்.

எனினும் 2021 ஆம் ஆண்டில் கொவிட்-19 இன்னும் பரவலாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

மோசமான சூழ்நிலைகள் இப்போது முடிந்து விட்டதாகக் கூறிய அவர், 2020 ஐ விடவும் 2021 இல் அதன் தாக்கம் குறைவாக இருக்கும்.

எவ்வாறாயினும் கொவிட்-19 தொற்றுநோய் தாக்கத்தை யாரும் முன் கூட்டியே அறிய முடியாது என்று அவர் எச்சரித்தார்.

வேகமாக பரவும் வைரஸ் வகைகளின் காரணமாக கொவிட்-19 க்கு எதிராக உருவாக்கப்பட்ட தடுப்பூசிகளின் செயற்றிறனை உலக சுகாதார ஸ்தாபனம் உன்னிப்பாகக் கண்காணித்து வருவதாகவும், தேவைப்பட்டால் புதிய பிறழ்வுகளின் அடிப்படையில் தடுப்பூசிகளை மாற்ற முடியும் என்றும் ஹான்ஸ் க்ளுக் குறிப்பிட்டார். (நி-4)

# சவுதி ராணுவத்தில் இனி பெண்கள்



(றியாத்)

சவுதி அரேபியாவில் பெண்கள் ராணுவத்தில் இணைவதற்கான சேர்க்கை நேற்று முன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து சவுதி பாதுகாப்புத்துறை அமைச்சகம் தரப்பில், "சவுதி அரேபியாவில் நேற்று முன்தினம் முதல் ராணுவத்தில் பெண்கள் சேருவதற்கான அனுமதி தொடங்கியது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சவுதி அரேபிய ராணுவத்தில் பெண்களை சேர்க்க முடிவு கடந்த 2019 ஆம் ஆண்டின் இறுதியில் எடுக்கப்பட்டது. இந்த நிலையில் தற்போது அதற்கான சேர்க்கையை சவுதி ராணுவம் ஆரம்பித்துள்ளது. இதை வரவேற்று சவுதி பெண்கள் நல ஆர்வலர்கள் கொண்டாடி வருகின்றனர்.

சவுதி அரேபியாவின் இளவரசர் முகமது பின் சல்மான், நாட்டில் உள்ள பெண்கள் உரிமைக்கு முன்னுரிமை கொடுத்து வருகிறார்.

பெண்கள் கார் ஓட்ட அனுமதி மற்றும் ஆண்களின் பாதுகாப்பு இல்லாமல் வெளிநாட்டுக்கு பயணம் மேற்கொள்ள அனுமதி ஆகிய மாற்றங்களை கொண்டு வந்தார். இந்த நடவடிக்கைகளை சவுதி பெண்கள் மிகவும் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர்.

கச்சா எண்ணெய் வளத்தின் மூலம் கிடைக்கும் வருமானத்தையே பெரிதும் நம்பியிருக்க வேண்டிய சூழலுக்கு மாற்றாகவும் பொருளாதாரத்தை விரிவு செய்யும் நோக்கிலும் பெண்கள் பொருள் ஈட்டும் வாய்ப்பு ஏற்படுத்தும் நடவடிக்கையை அந்நாட்டு அரசு எடுத்து வருகிறது. மேலும், பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகளையும் அறிவித்து வருகிறது. (நி-4)

# மூக்குக் கண்ணாடி அணிபவர்களுக்கு வைரஸ் தொற்றுவதற்கான சாத்தியம் குறைவு

## ஆய்வில் தகவல்



(டில்லி)

மூக்குக் கண்ணாடி அணிபவர்களுக்கு கொரோனா தொற்றுவதற்கான சாத்தியம் 3 மடங்கு குறைவாக காணப்படுகின்றமை ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.

இந்தியாவிலுள்ள ஆய்வுக் குழுவொன்றினால் இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஊடகங்கள் தெவித்துள்ளன.

சுமார் 300 பேரிடம் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் மூக்குக் கண்ணாடி அணிபவர்கள் குறைந்தளவில் தத்தமது முகத்தினை தொடுவதன் காரணமாக அவர்களுக்கு கொரோனா வைரஸ் தொற்றுவதற்கான சாத்தியம் குறைவாக காணப்படுவதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

ஒவ்வொரு மனிதனும் சராசரியாக மணித்தியாலம் ஒன்றுக்கு 23 தடவைகளை தமது முகத்தை தொடுவதாகவும் அதில் சராசரியாக 3 தடவைகள் கண்களை தொடுகின்றனர் என்றும் ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, தொடர்ச்சியாக மூக்குக் கண்ணாடி அணிபவர்கள் தொடர்ந்தும் முகம் மற்றும் கண்களை தொடுவதை தவிர்ப்பதன் காரணமாக அவர்களிடத்தில் கொரோனா தொற்றுக்குள்ளாகும் சாத்தியம் குறைவாக காணப்படுவதாக ஆய்வாளர்கள் மேலும் தெரிவிக்கின்றனர். (நி-4)

# கொரோனாவுக்கு எதிரான போராட்டத்தில் வெற்றி கண்டது இந்தியா- ஐ.நா.பாராட்டு

(நியூயோர்க்)

கொரோனா வைரஸிற்கு எதிரான போரில் இந்தியாவின் தலைமைக்கும், கொரோனா வைரஸ் தடுப்பூசி உதவிக்கும் ஐ.நா. சபை பொதுச்செயலாளர் அன்டனியோ குட்டேரஸ் பாராட்டு தெரிவித்துள்ளார்.



மக்கள் தொகை பெருக்கத்தில் உலகின் 2ஆவது பெரிய நாடு என்ற வகையில் இந்தியாவில் கொரோனா வைரஸ் தாக்கம் மிகப்பெரிய அழிவை ஏற்படுத்தி விடும் என்று உலக நாடுகள் அஞ்சியது உண்டு.

ஆனால் இந்தியா சரியான தருணத்தில் ஊரடங்கு, பொதுமுடக்கம் அறிவித்து, கட்டுப்பாடுகளை பின்பற்ற வைத்ததால் பரவல் குறைந்தது. மருத்துவ உட்கட்டமைப்பு வசதிகளை அதிரடியாக ஏற்படுத்தி, மீட்பு நடவடிக்கையிலும், உயிர்ப் பலிகளை குறைத்ததிலும் இந்தியா உலக நாடுகளுக்கு முன்மாதிரியாக அமைந்தது. இன்று வரை கொரோனாவுக்கு எதிரான போராட்டத்தை இந்தியா வெற்றிகரமான ஒன்றாக மாற்றிக் காட்டியும் உள்ளது.

கொரோனா தடுப்பூசிகளை உருவாக்குவதிலும் வேகம் காட்டியது. ஒரே நேரத்தில் 2 தடுப்பூசிகளை உள்நாட்டில் தயாரித்து அவற்றின் அவசரகால பயன்பாட்டு ஒப்புதல் வழங்கியுள்ளது. அந்த தடுப்பூசிகள் உள்நாட்டில் பயனாளிகளுக்கு போடப்படுவதுடன், வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

இந்த தருணத்தில் ஐ.நா. அமைதிப்படையினருக்கு இந்தியா கொரோனா தடுப்பூசிகளை இலவசமாக வழங்குவதாக வெளியுறவு அமைச்சர் எஸ். ஜெய்சங்கர் அறிவித்தார்.

மேலும், கொரோனா வைரஸ் பதிலளிப்பு நடவடிக்கையில் இந்தியா உலகளாவிய தலைவராக இருந்துள்ளது எனவும் ஐ.நா. சபை பொதுச்செயலாளர் அன்டனியோ குட்டேரஸ் பாராட்டு தெரிவித்துள்ளார்.

இதையொட்டி ஐ.நா. சபையின் இந்திய தூதர் திருமூர்த்திக்கு, அன்டனியோ குட்டேரஸ் எழுதிய கடிதத்தில் கூறியிருப்பதாவது,

உண்மையில் 150 இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கு முக்கியமான மருந்துகள், கண்டறியும் கருவிகள், வென்டிலேட்டர்கள், சுய பாதுகாப்பு கருவிகள் வழங்கி, கொரோனா தொற்றுநோய் பதிலளிப்பு முயற்சிகளில் இந்தியா உலகளாவிய தலைவராக உள்ளது.

உலக சுகாதார நிறுவனம் தற்போது அங்கீகரித்துள்ள 2 தடுப்பூசிகளில் ஒன்றை உருவாக்கி, உற்பத்தி செய்வதில் இந்தியா மேற்கொண்ட முயற்சிகள், உலகளாவிய தடுப்பூசி சந்தையில் மிகவும் தேவையான விநியோகத்தை கொண்டு வந்துள்ளது.

மேலும் தடுப்பூசி கிடைக்கச்செய்வதில் சமமான அணுகலை உறுதி செய்வதற்காக உலகளாவிய கோவெக்ஸ் வசதியை ஆதரிப்பதற்கும், பலப்படுத்துவதற்கும் நீங்கள் தொடர்ந்த முயற்சிகளையும் நான் பாராட்டுகிறேன் என குட்டேரஸ் தெரிவித்தார். (நி-4)

# முகப்புத்தகம் முடக்கப்பட்டது




(மியன்மார்)

மியன்மார் இராணுவத்தின் அதிகாரபூர்வ முகப்புத்தக பக்கமான டாட்மேடவ் முகப்புத்தகம் வரம்புகளை மீறியதற்காக முடக்கப்பட்டுள்ளது

போராட்டத்தின் உச்சகட்டமாக கலவரத்தில் ஈடுபட்ட இரு போராட்டக்காரர்கள் இராணுவத்தினரால் முன்னதாக சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இதனையடுத்து இந்தப் போராட்டம் மேலும் தீவிரம் அடைந்துள்ளது.

இந்த நிலையில், மியன்மார் இராணுவத்தின் அதிகார பூர்வ முகப்புத்தக பக்கமான டாட்மேடவ், முகப்புத்தக வரம்புகளை மீறியதற்காக முடக்கப்பட்டுள்ளது.

பலமுறை முகப்புத்தகத்தின் வரம்புகளை இந்த இராணுவ பக்கம் மீறி வந்ததால் தற்போது முடக்கப்பட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-4)

# பதவியை ராஜினாமா செய்தார் விவசாய அமைச்சின் செயலர்

(கொழும்பு)

விவசாய அமைச்சின் செயலாளராக பதவி வகித்து வந்த ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சுமேத பெரேரா அந்தப் பதவியிலிருந்து ராஜினாமா செய்துள்ளதாக அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்தன. தனிப்பட்ட காரணங்களால் அவர் கடந்த வாரம் ராஜினாமா செய்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேஜர் ஜெனரல் பெரேரா கடந்த ஆண்டுமே மாதம் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் விவசாய அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டார்.

இராணுவத்தின் பிரதி தலைமை தளபதியாக இருந்து இராணுவ சேவையிலிருந்து ஓய்வு பெற்றார்.

அவரது பதவிவிலகல் தொடர்பில் தென்னிலங்கை ஊடகமொன்றுக்கு கருத்து தெரிவித்த அமைச்சர் மகிந்தானந்த அளுத்கமகே, அமைச்சின் வேகத்திற்கு ஏற்றவகையில் அவரால் செயற்பட முடியவில்லை என்பதால் செயலாளர் பதவியில் இருந்து ராஜினாமா செய்யுமாறு மேஜர் ஜெனரல் பெரேராவிடம் கேட்டுக் கொண்டதாக தெரிவித்துள்ளார். (நி-4)



ஒரு இலட்சம் மரக்கன்றுகளை நாட்டும் தேசிய சாரணர் நிகழ்ச்சித்திட்டம் நேற்று முற்பகல் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் கொழும்பு கோட்டையில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் ஆரம்பமானது. உலக சாரணர் இயக்கத்தின் ஸ்தாபகர் பேடன்-பவல் பிரபுவின் 164 ஆவது பிறந்த நாளை நினைவு கூரும் வகையில் இந்த நிகழ்ச்சித் திட்டம் திட்டமிடப்பட்டுள்ளது.

# நிகழ்வுகளில் கலந்து கொள்பவர்களின் எண்ணிக்கையில் மாற்றம் எதுவுமில்லை

## இம்முடிவு எந்நேரத்திலும் மாற்றமடையலாம்

**(கொழும்பு)**

**திருமண நிகழ்வில் கலந்து கொள்பவர்களின் எண்ணிக்கையை 150 இலிருந்து 50 ஆக குறைக்கும் திட்டம் இடைநிறுத்தப்பட்டுள்ளது. கொவிட் தொற்றின் புதிய திரிபு இலங்கையில் இனம் காணப்பட்டதை அடுத்து திருமண நிகழ்வுகளில் இந்த தொற்று பரவும் வாய்ப்புகள் அதிகம் இருப்பதாகத் தெரிவிக்கப்பட்டதை அடுத்து சுகாதார அதிகாரிகள் மேற்படி மாற்றத்தை சிந்தித்திருந்தனர்.**

எனினும் திருமண நிகழ்வில் கலந்து கொள்பவர்களின் எண்ணிக்கையை 150 இல் இருந்து மாற்றாமல் இருக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக ஆரம்ப சுகாதார, தொற்றுநோய் மற்றும் கொவிட் நோய் கட்டுப்பாட்டு இராஜாங்க அமைச்சர் டாக்டர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

இது தொடர்பில் பல கோரிக்கைகள் விடுக்கப்பட்டுள்ளதால் இந்த மாற்றத்தை இடைநிறுத்த தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

அவர்களின் வாழ்வாதாரத்திற்கான கோரிக்கைகள் மற்றும் அதனால் ஏற்படும் விளைவுகளைக் கருத்தில் கொண்டு இதனை மாற்றாமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனினும் இந்த முடிவு எந்நேரத்திலும் மாற்றப்படலாம் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (நி-4)

# கட்டுநாயக்க - புத்தளம் ரயில் சேவை இடைநிறுத்தம்

(புத்தளம்)

புத்தளம் ரயில் பாதையில் குரன மற்றும் நீர்கொழும்பு இடையேயான ரயில் பாதை எதிர்வரும் 26 ஆம் திகதி காலை 8 மணிமுதல் 28 ஆம் திகதி இரவு 8.30 மணி வரை மூடப்படும் என்று ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

குரன மற்றும் நீர்கொழும்பு ரயில்நிலையங்களுக்கு இடையே இரட்டை பாதையை உருவாக்க புத்தளம் ரயில் பாதையை மூட இவ்வாறு முடிவு செய்யப்பட்டுள்ளது.

இதன் காரணமாக கட்டுநாயக்க மற்றும் புத்தளம் இடையேயான ரயில் சேவை அந்தக் காலகட்டத்தில் இயக்கப்படாது.

கொழும்பு, கோட்டை தொடக்கம் கட்டுநாயக்க ரயில் நிலையங்களுக்கு மாத்திரமே புத்தளம் பாதையில் இயக்கப்படும்.

எனினும் 28 ஆம் திகதி இரவு 8.30 மணி முதல் ரயில் சேவை மீண்டும் வழமைபோன்று நடைபெறும் என்று ரயில்வே திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது. (நி-4)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2236


### சுகிர்தா




### கஜீபா




### அஜித்




### ரவிராஜ்




### நிரூபன்





### பிரதீப்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# “விகாரைகள் மற்றும் கோயில்கள் சட்டம் ஒரு தனிநபர் சட்டம்”

## நீதி அமைச்சரின் அறிக்கையால் வெடித்தது சர்ச்சை



(கொழும்பு)

“விகாரைகள் மற்றும் ஆலயங்கள் தொடர்பான சட்டம் தனி நபர் சட்டம்” என்று நீதி அமைச்சர் அலி சப்ரி பாராளுமன்றத்தில் வெளியிட்ட கருத்துக்கு மகா சங்கத்தினர் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். மேலும் இது தொடர்பில் உடனடியாக நட வடிக்கை எடுக்குமாறு கோரி ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளனர்.

11 பௌத்த பிக்குகள் கையொப்பமிட்டுள்ள குறித்த கடிதம் எல்லே குணவன்ச தேரரால் ஜனாதிபதிக்கு அனுப்பப்பட்டுள்ளது. இதுபோன்ற தவறான சொற்களுக்காக அமைச்சருக்கு எதிராக தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அவர்கள் ஜனாதிபதியை வலியுறுத்தினர். நீதி அமைச்சர் முன்வைத்த அறிக்கையை பாராளுமன்ற ஹன்சார்ட்டிலிருந்து நீக்குமாறும் மகா சங்கம் கோரியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பௌத்த விகாரைகள் மற்றும் கோயில்கள் சட்டம் ஒரு தனி நபர் சட்டம் என்று நீதி அமைச்சர் அலிசப்ரி கடந்த 12 ஆம் திகதி பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

எனினும் பௌத்த விகாரைகள் மற்றும் ஆலயங்கள் சட்டம் அரசியலமைப்பின் 9ஆவது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு சட்டமாக இருப்பதால், அமைச்சரின் இந்த அறிக்கை புத்த சாசனத்திற்கு எதிரான ஒரு தீவிரமான அறிக்கை என்று மகா சங்கத்தினர் ஜனாதிபதிக்கு எழுதிய கடிதத்தில் வலியுறுத்தியுள்ளனர்.

‘இலங்கையின் சட்ட முறைமைக்கு ஒரு அறிமுகம்’ என்ற புத்தகத்தை மேற்கோள்காட்டி, “கண்டியன் சட்டம், தேசவளமை சட்டம் மற்றும் முஸ்லிம் திருமணம் மற்றும் விவாகரத்து சட்டம் மட்டுமே இந்த நாட்டின் தனியான சட்டங்கள் என்றும் அதில் குறிப்பிட்டுள்ளனர். (நி-4)

# கட்டாய தகனத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

கொரோனாத் தொற்றால் உயிரிழப்பவர்களின் சடலங்கள் கட்டாய தகனம் செய்யப்படுகின்றமையை எதிர்த்தும், நிபுணர் குழுவின் பரிந்துரைகளை உடன் அமுல்படுத்துமாறும் வலியுறுத்தி இன்று செவ்வாய்க்கிழமை எதிர்ப்பு ஆர்ப்பாட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஜனாதிபதி செயலகத்திற்கு அருகில் மாலை 3 மணிக்கு பலவந்த தகனத்திற்கு எதிரான தேசிய அமைப்பினால் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது.

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் நாட்டுக்கு விஜயம் செய்யும் தினத்தில் இந்த ஆர்ப்பாட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.இது தொடர்பில் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்ததாவது,

அரசாங்கம் பலாத்காரமான முறையில் தகனம் செய்யும் முறையை மாத்திரமே கடைப்பிடித்து வருகின்றது.

இந்த நட வடிக்கை உடனடியாக நிறுத்தப்பட்டு பிற மதத்த வர்களின் சமய உரிமைகளைப் பின்பற்றும் உரிமை அரசாங்கத்தினால் உறுதி செய்யப்பட வேண்டும். அதன் அடிப்படையில் இன்று எமது மத உரிமையை வென்றெடுப்பதற்கான எமது போராட்டம் இடம் பெறவுள்ளது.

இதன்போது, விசேட நிபுணர் குழுவினால் பரிந்துரை செய்யப்பட்டுள்ள முன்மொழிவுகளை அமுல்படுத்துமாறு கூறி அரசாங்கத்திற்கு எமது எதிர்ப்பை வெளிக்காட்டுவதற்காக அனைவரும் ஒன்றிணைய வேண்டும் என்று முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார். (நி-4)

# இலங்கை இராணுவத்தை உன்னிப்பாக அவதானிக்கும் அமெரிக்கா

(கொழும்பு)

இலங்கை இராணுவத்தில் ஏற்படும் மாற்றங்களை உன்னிப்பாக அவதானித்து வருவதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா ரெப்லிட்ஸ் தெரிவித்துள்ளதாவது,

அமெரிக்க சட்டங்கள் மற்றும் அமெரிக்க இராஜாங்க திணைக்களத்தின் கொள்கையின் அடிப்படையில் பாரிய மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டன என நம்பகத்தன்மை மிக்க தகவல்கள் கிடைத்துள்ள பாதுகாப்பு படைப் பிரிவுகளுக்கு அமெரிக்கா உதவிகளை வழங்குவதில்லை.

இலங்கை படையினர் தற்போதைய எதிர்கால அச்சுறுத்தல்களை எதிர்கொள்ளக் கூடியவர்களாக மாற்றுவதில் இலங்கைக்கு உதவுவது குறித்து அமெரிக்கா அர்ப்பணிப்புடன் உள்ளது.

இதன்மூலம் பிராந்தியத்தினதும் உலகினதும் பாதுகாப்பிற்கு பங்களிப்பை வழங்கக்கூடிய நிலையில் அது விளங்குவதை உறுதி செய்ய விரும்புகின்றது.

பாதுகாப்பு ஒத்துழைப்பு என்பது தொடர்ந்தும் மனித உரிமைகள் மதிக்கப்படுவதை வலியுறுத்தும், இது எங்கள் பயிற்சி உதவி மற்றும் ஈடுபாடுகள் தொடர்பில் அடிப்படையான விடயம்.

இலங்கை இராணுவத்தில் ஏற்படும் மாற்றங்களை நாங்கள் உன்னிப்பாக ஆராய்வோம். படையினர் கொள்கைகள், இராணுவக் கலாசாரம் போன்றவற்றில் ஏற்படும் மாற்றங்களையும் உன்னிப்பாக ஆராய்வோம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் மனித உரிமைகளை நிலை நாட்டுவது நம்பகத்தன்மை மிக்க பொறுப்புக்கூறல் மற்றும் நீதி நடைமுறைகளுக்கான இராணுவத்தின் அர்ப்பணிப்பையும் நாங்கள் உன்னிப்பாக அவதானிப்போம் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-4)

# இன்று ஒரு தகவல்

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## கனவு-சில ஆய்வுகள்

ஒருத்தருக்கு இப்பொழுது 60 வயது ஆகுகின்றது என்று வைத்துக் கொள்ளுங்கள். அவர் இதுவரைக்கும் 20 ஆண்டுகள் தூங்கிக் கழித்திருக்கின்றார். அந்த 20 ஆண்டுகளிலேயும் ஒரு 5 வருடத்தை கனவுகண்டே கழித்திருப்பார்.

ஒரு மனிதன் தன் வாழ்நாளிலே மூன்றிலே ஒருபங்கை தூங்கிக் கழித்து விடுகின்றான். அப்படித் தூங்குகின்ற நேரத்திலேயும் நான்கிலே ஒரு பங்கு நேரத்தை கனவு காண்பதில் கழித்து விடுகின் றான். இது நிபுணர்கள் சொல்வது. ஒருத்தர் தூங்கிக் கொண்டிருக்கின்றார். இப்பொழுது அவர் கனவு கண்டு கொண்டிருக்கின்றாரா, இல்லையா என்பதை எப்படி கண்டுபிடிப்பது?

1950 க்கு முன்னாடியெல்லாம் இதைக் கண்டுபிடிப்பதற்கு நமக்கு எந்த வழியும் தெரியாமல் தான் இருந்தது. அதற்குப் பிறகு தான் ஒரு ஆய்வாளர் (Eugene Aserinski) இதற்கு ஒரு வழியைக் கண்டு பிடித்தார்.

அதாவது தூங்குகின்றவர் கண்களைக் கவனித்துப் பார்க்க வேண்டும்.அதிலே ஒரு அசைவு ஏற்படும். இந்த அசைவை மின்சாரக் கருவிகள் மூலமாகப் பதிவு செய்தார்.

அதிலேயிருந்து என்ன தெரிய வந்தது என்றால் கனவு கண்டு கொண்டிருகின்ற ஒருத்தருடைய கண்கள் வேகமாக அசையுதாம். (Rapid Eye Movement) கனவு காணாமல் தூங்குகின்ற ஒருத்தருடைய கண்கள் மெதுவாகத்தான் அசையுதாம்.

அவர் இதோடு விடவில்லை. தூங்குகிறவருடைய இதயத் துடிப்பு, சுவாச வேகம், மூளை மின்னலைகள் இதையெல்லாம் கூடப் பதிவு செய்தார்.

விழிப்பு நிலையில் வெளிப்படுகின்ற மூளை மின்னலைகள், தூக்க நிலையில் வெளிப்படுகின்ற மூளை மின்னலைகள் இது இரண்டுக்கும் வித்தியாசம் இருந்தது.

அதே மாதிரி கனவு காணும் நிலையிலேயும் கனவு காணாத நிலையிலேயும் அது வேறு வேறு மாதிரியாக இருந்தது.இன்னொரு ஆய்வாளர் (William C. Dement ) என்ன கண்டு பிடித்தார் தெரியுமா? கனவு காணும் போது சுவாசம் அதிகரிக்குதாம். இதயத் துடிப்பு அதிகரிக்குதாம். கண்ணசைவு அதிகரிக்குதாம். ஆக.. கனவு பற்றிய ஆராய்ச்சிகளிலே மூளை மின்னலைகள்,விரைவான கண்ணசைவு இது இரண்டுக்கும் முக்கிய பங்கு உண்டு.

ஹான்ஸ்பர்ஜர் (Hans Berger) என்று ஒருத்தர் ஹிஜர்மானிய உளவியல் நிபுணர். மண்டையை ஒட்டி மின்வாய்களை வைத்து மூளையில் தோன்றும் மின்னழுத்த வேறுபாடுகளைப் பதிவு செய்யலாம் என்று கண்டு பிடித்தார்.

அந்தத் தத்துவத்தின் அடிப்படையில் தான் மூளை மின்னலை வரைவி (Electro Encephalorram) என்கின்ற கருவி உருவாக்கப் பட்டது.

ஆல்பிரட் மாரி (Alfred Marry) என்று ஒரு ஆராய்ச்சியாளர். உதவிக்குச் சில பேரை வைத்துக் கொண்டு அவர் தன்னையே கனவுப் பரிசோதனைக்கு உட்படுத்திக் கொண்டார்.

அது எப்படித் தெரியுமா? அவர் தூங்கும் போது.. அவர் மூக்குக்கு அருகே கொண்டு போய் ஒரு செண்ட் போத்தலைக் காட்ட வேண்டியது.

உடனே அவர் கெய்ரோவிலே இருக்கின்ற ஒரு வாசனைப் பொருள் விற்பனைக் கடையில் நின்று கொண்டிருக்கின்ற மாதிரி அவர் கனவு கண்டாராம்.அவர் முகத்திலே சிவப்பு நிற ஒளி விழுவது மாதிரி செய்திருக்கின்றார்கள். இப்பொழுது அவருடைய கனவிலே புயலும் இடியும் மின்னலும் வந்ததாம்.

பெரும்பாலான கனவுகள் தினசரி நடவடிக்கைகள் சம்பந்தப் பட்டதாகத்தான் இருக்கும்.

நமது வலுவான உணர்ச்சிகள், உள்ளப் போராட்டங்கள், தீராத ஏக்கங்கள், பயம் இவைகளின் பிரதிபலிப்புகளைத் தான் நாம் கனவுகளாகக் காண்கின்றோம்.

எங்கள் ஆள் ஒருத்தர், துணைக்கு ஒரு ஆளை வைத்துக் கொண்டு கனவு ஆராய்ச்சி செய்தார். தூங்கி விழித்ததற்குப் பின்பு பார்த்தால் துணைக்கு இருந்த ஆளைக் காணோம். இவர் அழ ஆரம்பித்து விட்டார். ஏன் சேர் அழுகின்றீர்கள்.. ? அவன் ஓடிப் போய்விட்டான் என்பதற்காகவா? என்றார்கள். அவன் ஓடிப் போனதற்காக நான் அழவில்லை சேர். நான் வைத்திருந்த பணத்துடன் அவன் ஓடிப் போய்விட்டான் சேர் அதற்காக அழுகின்றேன் என்றார்.

# அமெரிக்காவின் சிக்கல் நிறைந்த ஜனாதிபதித் தேர்தல் முறைமையும் சர்ச்சைகள் நிறைந்த ஜோ பிடனின் பதவிப் பிரமாணமும் -2021

12

கலாநிதி க.தவலிங்கம் ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



கையால் எண்ணப்படும் காகித வாக்குகள் **(Hand Counted Paper Ballots)** இது ஒரு வாக்களிக்கும் உபகரணம் அல்ல. இது இலங்கையில் உள்ள வாக்குச் சீட்டை (நடைமுறையை) போன்றது.

காகிதவாக்குகள் **(paper ballots)** மிகவும் நெகிழ வைக்கும் வாக்களிப்பு முறையாகும் என்பதைத் தேர்தல் பாதுகாப்பு நிபுணர்கள் ஒப்புக் கொள்கிறார்கள். ஏனெனில் அவ்வகை வாக்களிப்பு, வாக்களிப்பதற்கு முன் வாக்காளரால் சரி பார்க்கப்படுகின்றன. ஐந்து மாநிலங்கள் மின்னணு வாக்குப்பதிவு முறைகளைப் பயன்படுத்துகின்றன. பல மாநிலங்கள் காகித வாக்குப் பதிவு மற்றும் மின்னணு வாக்குப்பதிவு முறைகளைப் பயன்படுத்துகின்றன. சில மாநிலங்களில் காகித வாக்குப் பதிவு முறை மட்டுமே உள்ளது.

ஒவ்வொரு மாநிலத்திலும் வாக்குப்பதிவு முடிந்தவுடன், அங்கு வாக்கு எண்ணிக்கை தொடங்கும். எல்லா வாக்குகளும் தேர்தல் நாளன்று இரவே எப்போதும் எண்ணி முடிக்கப்பட்டதில்லை. ஆனால், வெற்றி பெற்றவர் யார் என்பதை தீர்மானிக்கும் அளவுக்கு வாக்குகள் அன்று இரவே எண்ணி முடிக்கப்பட்டிருக்கும். ஆனால் இது இம்முறை முடியாமல் போய்விட்டது. அதற்குக் காரணம் தபால் வாக்குகளே.

நியூ ஹேம்ப்ஷையர் மாகாணத்தில் உள்ள சின்னஞ்சிறு நகரமான டிக்ஸ்வைல் நாட்ச் நகரம் அமெரிக்காவிலேயே தேர்தல் முடிவுகளை வெளியிடும் முதல் பகுதிகளில் ஒன்றாக கடந்த 60 ஆண்டுகளாக இருந்து வருகிறது. அங்கு நடந்த வாக்குப்பதிவின் முடிவுகள் உள்ளூர் நேரப்படி செவ்வாய் நள்ளிரவு வெளியானது. 12 பேர் வசிக்கும் டிக்ஸ்வைல் நாட்ச் நகரில் பதிவான ஐந்து வாக்குகளும் ஜனநாயக கட்சியின் வேட்பாளர் ஜோ பிடனுக்கே சென்றுள்ளன. ஜனாதிபதி ட்ரம்ப் ஒரு வாக்கைக் கூடப் பெறவில்லை.

பெரும்பாலான அமெரிக்க மாநிலங்களில் வாக்குப்பதிவுகள் மின்னணு முறைகளை அனுமதித்தாலும் காகித வாக்குச்சீட்டுகள் நாடு முழுவதும் வழக்கமாக உள்ளன என்று கூறியிருந்தேன். இவ் வாக்குச்சீட்டுகளை எண்ணுவதற்கு முன்னால் செயலாக்கம் **(processing)** எனப்படும் ஒரு கட்டம் வருகிறது.

இதில் கையொப்பங்களைச் சரி பார்ப்பது, ஆவணங்களை சரிபார்ப்பது மற்றும் வாக்குச்சீட்டுகளை ஸ்கான் செய்வது போன்றவை அடங்கும். வாக்குச்சீட்டுக்களை எண்ணுவது பின்னர் தனியாகச் செய்யப்படும் ஒரு செயல்முறையாகும்.

**ட்ரம்ப் ஆதரவுக் கும்பலின் வன்முறை**




இந்தத் தேர்தலில் கொரோனா வைரஸ் தொற்றுநோய் காரணமாக முன்னெப்போதையும் விட அதிகமானவர்கள் தபால் மூலமாக, 6.6 கோடி மக்கள், மொத்த வாக்களிப்பில் **42%** வாக்களித்திருந்தார்கள். எனவே இவற்றில் கையொப்பம் மற்றும் முகவரி போன்ற இன்னும் பல சரிபார்க்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியிருந்ததால் இத் தேர்தலில் தபால் வாக்குகள் எண்ணுவதற்கு அதிக நேரம் எடுத்தது.

20 மாநிலங்களில் தபால் வாக்குகள் தேர்தல் அலுவலகத்திற்கு கிடைத்ததும் எண்ணுவதற்கான ஆயத்தங்கள் செய்யப்படுகின்றன. 27 மாநிலங்களில் இவை தேர்தல் நடைபெறும் நாளுக்கு முன் (2 கிழமைகளுக்கு முன், 1-2 கிழமைகளுக்கு முன், ஒரு கிழமைக்கு முன்) எண்ணுவதற்கான ஆயத்தங்கள் செய்யப்படுகின்றன. 4 மாநிலங்களில் வாக்களிப்பு முடிந்த பின் எண்ணுவதற்கான ஆயத்தங்கள் செய்யப்படுகின்றன.

**தபால் வாக்குகள் தேர்தல் அலுவலகத்திற்கு கிடைத்ததும் எண்ணுவதற்கான ஆயத்தங்கள் செய்யப்படுகின்றன. 27 மாநிலங்களில் இவை தேர்தல் நடைபெறும் நாளுக்கு முன் (2 கிழமைகளுக்கு முன், 1-2 கிழமைகளுக்கு முன், ஒரு கிழமைக்கு முன்) எண்ணுவதற்கான ஆயத்தங்கள் செய்யப்படுகின்றன. 4 மாநிலங்களில் வாக்களிப்பு முடிந்தபின் எண்ணுவதற்கான ஆயத்தங்கள் செய்யப்படுகின்றன.**

**இந்தத்தேர்தலில் கொரோனா வைரஸ் தொற்றுநோய் காரணமாக முன்னெப்போதையும் விட அதிகமானவர்கள் தபால் மூலமாக, 6.6 கோடி மக்கள், மொத்த வாக்களிப்பில் 42% வாக்களித்திருந்தார்கள்.**

இத்தேர்தலில் தற்காலிக வாக்குச் சீட்டுகளின் எண்ணிக்கையிலும் அதிகரிப்பு ஏற்பட்டது. பெரும்பாலான மக்கள் தபால்மூலம் வாக்களிப்பதற்கு அனுமதியைப் பெற்றுவிட்டு அதற்குப் பதிலாக வாக்குச்சாவடிக்கு நேரில் சென்று வாக்களிக்க முடிவு செய்தனர்.

அவ்வாறு தற்காலிக வாக்குச் சீட்டுகளின் மூலம் வாக்களித்தவர் யாரும் இரண்டு முறை வாக்களிக்கவில்லை என்பதை உறுதிப்படுத்த இவை கவனமாக சரி பார்க்க வேண்டி ஏற்பட்டதால் தற்காலிக வாக்குச்சீட்டு வாக்கு எண்ணலிலும் தாமதம் ஏற்பட்டது.



**வாக்குச்சீட்டுகளை எண்ணுவதற்கு ஒழுங்குபடுத்தும் செயற்பாடு**

இதுவும் தேர்தல் முடிவுகள் வெளிவர தாமதத்தை ஏற்படுத்தியது. இவ்வாறு பல காரணிகள் விரைவான வாக்கு எண்ணலை சிக்கலாக்கின. மேலும் சில மாநிலங்களில் எண்ணப்பட வேண்டிய வாக்குகளின் எண்ணிக்கை தெளிவாகத் தெரியாமல் இருந்தது. இதற்குக் காரணம் தபால் வாக்குகள் வந்து சேர்வதில் ஏற்பட்ட தாமதங்களே. ட்ரம்புக்கும் ஜோ பிடனுக்கும் இடையேயான வாக்கு வித்தியாசம் மிக நெருக்கமாக இருந்ததால் பல மாநிலங்களில் வாக்கு எண்ணும் செயல்முறை குறித்து குழப்பம் அதிகரித்திருந்தது.

## 2020 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் ஊசலாட்ட மாநிலங்களாக அடையாளம் காணப்பட்டவை

2020 ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயக மற்றும் குடியரசுக் கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவைப் பிரித்த மாநிலங்கள் போர்க்கள மாநிலங்கள் என்று அழைக்கப்பட்டன. சில நேரங்களில் இவை ஊசலாட்ட மாநிலங்கள் அல்லது ஊதா மாநிலங்கள் என்று குறிப்பிடப்படுகின்றன, இவை ஒரு வேட்பாளரின் பிரசார மூலோபாயத்திற்கு முக்கியமானவை.

ஏனெனில் வேட்பாளரின் பிரசார மூலோபாயத்திற்கேற்பவே இம் மாநில மக்கள் வாக்களிப்பார்கள். இவ்வாறு 13 மாநிலங்கள் போர்க்கள மாநிலங்களாக அடையாளம் காணப்பட்டிருந்தது. அவை யாவன:அரிசோனா, புளோரிடா, ஜோர்ஜியா, அயோவா, மிச்சிகன், மினசோட்டா, நெவாடா, நியூஹாம்ப்ஷயர், வடகரோலினா, ஓஹியோ, பென்சில்வேனியா, டெக்சாஸ் மற்றும் விஸ்கான்சின். இதில் குடியரசுக் கட்சி வேட்பாளர் டொனால்ட் ட்ரம்ப் புளோரிடா, இயோவா, வட கரோலினா, ஓஹியோ, டெக்சாஸ், ஆகிய 5 மாநிலங்களில் வெற்றி பெற்றார். ஜனநாயக கட்சிவேட்பாளர் ஜோபிடன் அரிசோனா, ஜோர்ஜியா, மிச்சிகன், மினசோட்டா, நெவாடா, நியூஹாம்ப்ஷயர், பென்சில்வேனியா,விஸ்கான்சின் ஆகிய 8 மாநிலங்களில் வெற்றி பெற்றார்.

**2020 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயக மற்றும் குடியரசுக் கட்சி வேட்பாளர்களுக்கு ஆதரவைப் பிரித்த மாநிலங்கள் போர்க்கள மா நிலங்கள் என்று அழைக்கப்பட்டன. சிலநேரங்களில் இவை ஊசலாட்ட மாநிலங்கள் என்றும் குறிப்பிடப்படுகின்றன. இவ்வாறு அடையாளம் காணப்பட்ட 13 மாநிலங்களில் ஜோ பிடன் 8 மாநிலங்களில் வெற்றி பெற்றார்.**

(தொடரும்...)

# மதம் சார்ந்த புகைப்படங்கள் பொறித்த கையுறைகள்

## சந்தேக நபர்கள் கைது

(கொழும்பு)

மதம் சார்ந்த புகைப்படங்கள் பொறிக்கப்பட்ட 300 இற்கும் மேற்பட்ட கையுறைகளை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.


புஜாபிட்டிய பகுதியில்வைத்து இந்த பறிமுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், இதன்போது சந்தேக நபர்கள் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்தார்.

சந்தேக நபர்களிடமிருந்து 311 கையுறைகள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

இவர்கள் மதச் சமூகங்களின் உணர்வுகளைப் புண்படுத்தும் மற்றும் இழிவுபடுத்தும் வகையிலான செயலில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் பிரதிப் பொலிஸ்மா அதிபர் கூறினார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பூஜாபிட்டிய பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (நி-4)

# ஆலய வழிபாடு ஏன்-எதற்கு - எப்படி



## சிவ மூலிகைகளின் சிகரம் -வில்வம்

(தொடர்ச்சி)

வில்வத்தின் சிறப்பு பற்றி புராணங்களில் பல கதைகள் உள்ளன.

ஒரு தடவை காட்டுக்கு வேட்டையாடச் சென்ற வேடனை புலி துரத்தியது. வில்வ மரத்தின் மீது ஏறிய வேடன் தூக்கம் வராமல் இருக்க, இலைகளைப் பறித்து போட்டுக் கொண்டே இருந்தான். அது மரத்தடியில் இருந்த லிங்கம மீது விழுந்தது.

விடிந்த பிறகுதான் அவனுக்கு தான் ஏறியது வில்வ மரம் என்று தெரிந்தது. அன்றைய இரவு சிவராத்திரியாகவும் இருந்தது. வேடன் தன்னை அறியாமல் லிங்கம் மீது வில்வ தளங்களை போட்ட காரணத்தால் அவனுக்கு மோட்சம் கிடைத்தது.

மகா சிவராத்திரி நாளில் வில்வாஷ்டகம் பாராயணம் செய்து வில்வம் சார்த்தி, சிவபெருமானை வழிபட்டால் ஏழு ஜென்ம பாவம் விலகும் என்பது ஐதீகம்.

ஊழிக்காலத்தில் அனைத்தும் அழியும் என்று உணர்ந்த வேதங்கள் தாங்கள் அழியாதிருக்க என்ன வழி என்று ஈசனிடம் கேட்க, ஈசனும் திருவைகாவூர் தலத்தில் வில்வ மரத்தின் வடிவில் நின்று தவம் செய்யுமாறு அருளினார்.

அதன்படி வேதங்களும் வில்வ மரங்களாக தவம் இயற்றியதால் திருவைகாவூர் என்ற தலம் வில்வராண்யம் என்று சிறப்புப் பெற்றது.

இத்தகைய சிறப்புடைய வில்வ மரம் திருவையாறு, திருவெறும்பூர், ராமேஸ்வரம் உட்பட 30 இற்கும் மேற்பட்ட ஆலயங்களில் தலவிருட்சமாக உள்ளது. வீடுகளிலும் வில்வ மரம் வளர்க்கலாம்.

வீட்டில் வில்வ மரம் வளர்த்தால் அஸ்வ மேத யாகம் செய்த பலன் கிடைக்கும். ஆயிரம் பேருக்கு அன்னதானம் செய்த புண்ணியம் உண்டாகும். 108 சிவாலயங்களை தரிசனம் செய்த பலனும் புண்ணிய நதிகளில் நீராடிய பலனும் கிடைக்கும்.

வில்வ மரம் வளர்ப்பவர்களை ஏழரை சனி நெருங்காது. வில்வ மரத்தை தினமும் பூஜித்தால் செல்வம் பெருகும். கடன் தொல்லைகள் மறையும்.

வெள்ளிக்கிழமைகளில் வில்வ மரத்தின் கீழ் அமர்ந்து லட்சுமி துதி சொல்லி நைவேத்தியம் படைத்து வழிபட்டால் அளவிட முடியாத அளவுக்கு அற்புதங்கள் நடக்கும்.

வில்வ மரத்துக்கு ஸ்ரீவிருட்சம் என்றும், வில்வ பழத்துக்கு ஸ்ரீபழம் என்றும் பெயருண்டு. எனவே வில்வ மரத்தை பார்த்ததும் தொட்டுக் கண்களில் ஒற்றிக் கொள்ள வேண்டும்.

மருத்துவ ரீதியாகவும் நிறைய பலன்களை வில்வம் தருகிறது. தினமும் வில்வ மரத்தடியில் தியானம் செய்தால் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும் ஊளைச் சதை குறையும்.

வில்வ இலை பொடியை சாப்பிட்டால் கண் பார்வை தெளிவாகும். பல் வலி நீங்கும். சளி, இருமல், சைனசுக்கு வில்வ இலை பொடி சிறந்த மருந்தாகும்.

கொழுப்பு கட்டுப்படும். இரத்த அழுத்த பிரச்சினை திரும். நீரிழிவு நோய் குணமாகும். அல்சர் பிரச்சினை வரவே வராது. ஜீரணக் கோளாறுகள் சரியாகும். உடல் குளிர்ச்சி பெறும். இதனால் தோல் சம்பந்தப் ட்ட எந்த வியாதியும் வராது.

இன்னும் ஏராளமான மருத்துவ பலன் தரும் வில்வ தளத்தை பறிக்கும் போது பயபக்தியுடன் பறிக்க வேண்டும். அமாவாசை, பௌர்ணமி, மாதப் பிறப்பு, திங்கட்கிழமை, அஷ்டமி, நவமி, சதுர்த்தி நாட்களில் வில்வம் இலைகளை பறிக்கக்கூடாது.

வில்வ இலைகளை சுத்தம் செய்து எத்தனை தடவை வேண்டுமானாலும் பயன்படுத்தலாம். வில்வம் காய், பழத்தை யாகத்துக்குப் பயன்படுத்தலாம். வில்வ தளத்தை பறித்த பிறகு 6 மாதம் வரை வீட்டில் பூஜை செய்யலாம். உலர்ந்த வில்வமும் புனிதமானது. (முற்றும்)

# செய்தித்துளிகள்

## 24 மணி நேரத்தில் 22 விமான சேவைகள்

(கொழும்பு)

கட்டுநாயக்க விமான நிலையம் ஊடாக நேற்று முன்தினம் காலை 8.30 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் 22 விமான சேவைகளை வழங்கி சாதித்துள்ளது.

கொரோனாக் கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் ஒரே நாளில் அதிகளவான சேவைகள். வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

## அந்நியச் செலாவணி அதிகரிப்பு

(கொழும்பு)

கடந்த ஜனவரி மாதம் வெளிநாடுகளிலுள்ள இலங்கை தொழிலாளர்கள் அனுப்பிய அந்நிய செலாவணி அளவு 16.3 சதவீதத்தினால் அதிகரித்து 675 மில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவாகியுள்ளது.

நாணய மாற்றுவீதத்தின் படி, இந்த தொகை 22.1 சதவீத வளர்ச்சியாக கருதப்படுகின்றது.

வெளிநாட்டில் வசிக்கின்ற இலங்கையர்கள் நாட்டுக்கு அனுப்பும் பணம் குறைந்து விட்டதாலும் கடந்த ஆண்டில் மாத்திரம் அவர்கள் 7.1 பில்லியன் அமெரிக்க டொலர்களுக்கும் அதிக தொகை அனுப்பியதாக தெரிவிக்கப்படுகின்றது.

2019 ஆம் ஆண்டு வெளிநாடுகளிலுள்ள இலங்கையர்கள் 6.7 பில்லியன் அமெரிக்க டொலர் அந்நியச்செலாவணியை அனுப்பினர். (நி-4)

## 130 சுற்றிவளைப்புக்கள்; பலர் கைது

(கொழும்பு)

வாத்துவை பிரதேசத்தில் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பொன்றில் 200 கிராம் ஹெரோயினுடன் 32 வயதுடைய சந்தேக நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மினுவாங்கொடை பிரதேசத்தில் நேற்று மேற்கொள்ளப்பட்ட விசேட சோதனை நடவடிக்கையில் துப்பாக்கியுடன் ஒருவருமாக 25 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். நாடு பூராகவும் சுமார் 130 போதைப்பொருள் சுற்றிவளைப்புக்கள் நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்டதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் தெரிவித்தார். (நி-4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 100 | 80 | 100 | 100 |
| உருளைக்கிழங்கு | 120 | 120 | 120 | 130 |
| பச்சைமிளகாய் | 400 | 300 | 300 | 450 |
| தக்காளி | 250 | 230 | 250 | 280 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 50 | 70 | 40 |
| கோவா | 100 | 100 | 100 | 120 |
| கரட் | 160 | 180 | 200 | 200 |
| பூசணி | 100 | 100 | 100 | 100 |
| புடோல் | 180 | 140 | 120 | 120 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 300 | 260 | 300 | 280 |
| பெரிய வெங்காயம் | 140 | 160 | 120 | 160 |
| பாகற்காய் | 160 | 200 | 150 | 300 |
| வெண்டிக்காய் | 250 | 220 | 160 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 120 | 120 |
| பயற்றங்காய் | 140 | 140 | 160 | 120 |
| லீக்ஸ் | 130 | 120 | 120 | 150 |
| பீற்றூட் | 120 | 100 | 150 | 120 |
| கறிமிளகாய் | 250 | 300 | 350 | 350 |
| முருங்கைக்காய் | -- | -- | -- | -- |
| போஞ்சி | 120 | 120 | 120 | 200 |
| கத்தரிதம்புள்ள | 80 | 70 | 80 | 80 |
| கீரை - 1 பிடி | 60 | 25 | 30 | 30 |
| தேசிக்காய் | 120 | 100 | 120 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 80 | 80-110 |
| இராசவள்ளி | 250 | 200 | 200 | 220 |
| வெங்காயப்பூ | 160 | 120 | 150 | 240 |
| முள்ளங்கி | 80 | 100 | 80 | 100 |
| பொன்னாங்காணி | 50 | 50 | 40 | 40 |
| வல்லாரை | 40 | 150 | 20 | 30 |
| ஈரப்பலா | 150 | 100 | 60 | 100 |

# இந்தியாவின் அனுசரணை இல்லாது ஈழத் தமிழருக்கு தீர்வு கிடைக்காது

(யாழ்ப்பாணம்)

இந்தியாவின் அனுசரணையில்லாது ஈழத்தமிழர் பிரச்சினைக்கான தீர்வு சாத்தியமில்லை என ஜனநாயக போராளிகள் கட்சியின் பொதுச் செயலாளர் இ.கதிர் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடக வியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 46 ஆவது கூட்டத் தொடர் ஆரம்பமாகி உள்ளது. இந்த நிலையில் கடந்த காலங்களில் ஐ.நாவினால் முன்வைக்கப்பட்ட சில விடயங்கள் தொடர்பாக தமிழ் மக்கள் ஒரு பெரிய எதிர்பார்ப்போடு இருக்கின்றார்கள்.

இலங்கையில் நடந்த போர்க்குற்றங்கள் தொடர்பில் ஐ.நாவினுடைய போர்க்குற்ற நீதிமன்றத்தில் விசாரணைகள் நடைபெறும் என்ற நம்பிக்கையோடு எமது மக்கள் இருக்கின்றார்கள்.

ஆனால் அவ்வாறான சூழல் தற்போது அமையவில்லை. ஐ.நாவினுடைய நிலையில் சில மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. முதலாவதாக, வரைபிலேயே இலங்கைக்கு எதிரான சில விடயங்கள் குறிப்பிடப்படவில்லை. ஏனென்றால் தற்போதைய சூழ்நிலையில் எமது மக்களுடைய எதிர்பார்ப்பு என்பது இலங்கையை ஒரு குற்றவியல் நீதிமன்றத்திற்கு கொண்டு சென்று அங்கு சரியான முறையில் உண்மைகள் விசாரிக்கப்பட்டு எமது மக்களுக்கான நீதி கிடைக்க வேண்டும் என்பது தான்.

அந்த வகையில் பன்னாட்டு சமூகம் எமது மக்களுக்காக, எமது மக்களுடைய நீதிக்காக செயற்பட வேண்டும்.

இந்தியாவினுடைய அங்கீகாரம் எமக்குக் கிடைக்குமாக இருந்தால் உலகம் நமது பக்கம் திரும்பிப் பார்க்கும். அத்தோடு எமது மக்களுடைய நியாயமான பிரச்சினைக்கு தீர்வு காண முன்வரும் என எதிர்பார்க்கின்றோம்.

அந்தச் சூழ்நிலை தற்போது உருவாகி இருக்கின்றது. அண்மையில் தமிழ் நாட்டுக்கு விஜயம் மேற்கொண்ட இந்தியப் பிரதமர் ஈழத் தமிழர்களுக்கான உரிமை தொடர்பாக குரல் கொடுத்திருக்கின்றார். தொடர்ந்தும் இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தங்களைக் கொடுப்பதாக கூறியிருக்கிறார்.

இந்தியாவினுடைய அனுசரணை இல்லாமல் ஈழத்தமிழர்களுக்கான பிரச்சினைக்கு தீர்வு இலங்கைத் தீவிலே சாத்தியமில்லை என அவர் தெரிவித்தார். (5-4-33)

# போதைப் பொருளுடன் ஒருவர் கைது

(சாவகச்சேரி)

ஹெரோயின் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு சாவகச்சேரி பொலிஸாரால் சங்கத்தானைப் பகுதியில் வைத்து இளைஞன் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

கைது செய்யப்பட்டவரிடமிருந்து பொலிஸார் 2 கிராம் 350 மில்லிகிராம் ஹெரோயின் போதைப்பொருளை மீட்டுள்ளனர். கைதான சந்தேக நபரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான முயற்சிகளை சாவகச்சேரி பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (5-4-30)

# கீரிமலை நகுலேஸ்வரர் வருடாந்த மஹோற்சவம்

(குப்பிழான்)

கீரிமலை ஸ்ரீநகுலேஸ்வரர் ஆலய வருடாந்த மஹோற்சவப் பெருவிழா எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல்- 11.15 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்தும் 15 தினங்கள் இடம்பெறவுள்ள இவ்வாலய மஹோற்சவப் பெருவிழாவில் எதிர்வரும் 10 ஆம் திகதி புதன்கிழமை இரவு சப்பறத் திருவிழாவும், 11 ஆம் திகதி வியாழக்கிழமை காலை தேர்த் திருவிழாவும், அன்றைய தினம் இரவு நான்கு சாமப் பூசையுடன் சிவராத்திரி உற்சவமும், 12 ஆம் திகதி காலை தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன.

இதேவேளை, இவ்வாலய மஹோற்சவப் பெருவிழாவில் கலந்து கொள்ளும் அடியவர்கள் அனைவரும் சுகாதார அறிவுறுத்தலின்படி கைகால்களைக் கழுவி, முகக் கவசம் அணிந்து, சமூக இடைவெளியைக் கடைப்பிடித்துக் கலந்து கொள்ளுமாறு ஆலய ஆதீன கர்த்தா அறிவித்துள்ளார்.(5-4-6-18)

# கொழும்பிலிருந்தவாறு கரணவாயில் திருட்டு முறியடிப்பு

(கரணவாய்)

கரணவாய் கிழக்கு பிரதேசத்திலுள்ள வீடொன்றில் கடந்த 20 ஆம் திகதி திருட முற்பட்ட இருவரை கொழும்பில் வசிக்கும் வீட்டு உரிமையாளர் சி.சி.ரிவி மூலம் அவதானித்து அயலவர்களுக்கு தொலைபேசி மூலம் தெரியப்படுத்தியதையடுத்து அயலவர்களால் மேற்கொள்ளப்பட்ட முயற்சியால் குறித்த இரு நபர்களும் பிடிபட்டனர்.

இருவரையும் பொலிஸாரிடம் ஒப்படைத்தனர். பொலிஸார் மேலதிக விசாரணையின் பின்னர் இருவரையும் பருத்தித்துறை நீதிமன்றில் முன்னிலைப்படுத்திய போது தலா ஒரு இலட்சம் ரூபாய் ஆட்பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர். (5-4-60)



கிளிநொச்சி மாவட்டத்தின் மீள்குடியேற்றக் கிராமங்களில் ஒன்றாக காணப்படுகின்ற பச்சிலைப்பள்ளி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பச்சிலைப்பள்ளி முல்லையடி கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள திராய் குளத்தினை புனரமைக்கும் செயற்பாட்டின் ஆரம்ப நிகழ்வானது நேற்று முல்லையடியில் நடைபெற்றது. இதில் முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் வை.தவநாதன் மற்றும் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் ஜெயராணி பரமோதயன் ஆகியோர் உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைத்தனர். இந்த நிகழ்வில் பிரதேச விவசாயிகள், பொதுமக்கள் அமைப்புக்களின் பிரதிநிதிகள் என பலர் கலந்துகொண்டனர்.

# நானு ஓயாவில் பஸ் விபத்து 13 பேர் படுகாயம்



(ஹற்றன்)

நானுஓயா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நுவரெலியா - ஹற்றன் பிரதான வீதியில் நானுஓயா ரதல்ல குறுக்கு வீதியில் இடம்பெற்ற பேருந்து விபத்தில் 13 பேர் படுகாயங்களுக்குள்ளாகியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த விபத்து நேற்று பிற்பகல் 2.30 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மொனராகலை பகுதியிலிருந்து தலவாக்கலை பகுதிக்கு மரண வீடு ஒன்றுக்காக சென்று கொண்டிருந்த போது, ரதல்ல குறுக்கு வீதியில் வைத்து முன்னே சென்ற பௌசர் ரக வாகனத்துடன் மோதி, இழுத்துச் சென்று மண்மேட்டில் மோதுண்டே குறித்த பேருந்து இவ்வாறு விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்துக்குள்ளான பேருந்தில் 18 பேர் பயணித்துள்ளதுடன், இதில் 13 பேர் பலத்த காயங்களுடன் நுவரெலியா ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர்.

மேலும், விபத்து குறித்த மேலதிக விசாரணைகளை நானுஓயா போக்குவரத்து பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (5-4)

# ஆரம்பப் பாடசாலையில் இலத்திரனியல் பொருட்கள் திருட்டு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கைதடி மேற்கு கலைவாணி ஆரம்ப பாடசாலையில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை இரவு கதவுடைத்து இலத்திரனியல் பொருட்கள் திருடப்பட்டுள்ளன.

அதிபரின் அறையில் காணப்பட்ட கணனி உள்ளிட்ட இலத்திரனியல் பொருட்களே இவ்வாறு திருடப்பட்டுள்ளன.

இது தொடர்பாக பாடசாலை நிர்வாகம் சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் பதிவு செய்த முறைப்பாட்டின் அடிப்படையில் சாவகச்சேரி பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (5-4-30)



முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் சிறுபோக பயிர்ச்செய்கை மற்றும் நெல் கொள்வனவு தொடர்பான கலந்துரையாடல் நேற்று நடைபெற்றது. குறித்த கலந்துரையாடலில் மாவட்டத்தில் மேற்கொள்ளப்படவுள்ள சிறுபோக பயிர்ச்செய்கைக்கான பசளை மானியங்களை பசளை உரச்செயலகத்திற்கு உறுதிப்படுத்தி அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகள் மற்றும் நெல் கொள்வனவு தொடர்பாக ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டன. (படம்: யதுபாஸ்கரன்)

# சொற்பொழிவு

(குப்பிழான்)

நீர்வேலி கந்தசுவாமி ஆலயத்தில் இடம்பெற்று வரும் வாராந்த சொற்பொழிவில் எதிர்வரும் 26 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 5.15 மணியளவில் சைவ சமய மரபில் புராணபடனத்தின் முக்கியத்துவம் எனும் தலைப்பில் இடம்பெறவுள்ளது.

இச்சொற்பொழிவை சைவப் புலவர் கந்த சத்தியதாசன் ஆற்றுவார். (5-4-10)

உலக வரலாற்றில் வலிமையே நியாயத்தை உருவாக்குகிறது என்று சொல்கிறார்கள். நம்முடைய காலத்தில் நியாயமே வலிமையை உருவாக்குகிறது என்று மாற்றிக் காட்ட வேண்டும். – ஆபிரகாம் லிங்கன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## எம் தமிழ் இனத்துக்கான நீதி வானுலகில் இருந்தே வர வேண்டும்

உலக நாடுகளைப் பொறுத்தவரை ஈழத் தமிழர் விவகாரம் என்பது ஆறிய கஞ்சியாகி விட்டதோ என்று எண்ணத் தோன்றுகிறது.

நேற்றைய தினம் ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் ஜெனிவாவில் ஆரம்பமாகியது.

இன்று இலங்கை விவகாரம் கூட்டத் தொடரின் நிகழ்ச்சி நிரலில் இடம்பெற்றுள்ளது.

2009ஆம் ஆண்டு வன்னிப் பெருநிலப் பரப்பில் தமிழினத்தைச் சங்காரம் செய்யும் பேரவலம் நடந்தது.

ஐ.நா சபையின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் இலங்கைக்கு வருகை தந்து, உலங்கு வானூர்தியில் பறந்த வண்ணம் வன்னியில் நடந்த யுத்த அனர்த்தங்களைப் பார்வையிட்டாராம்.

யுத்தத்தில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களை நேரில் சந்திக்காமல், இலங்கை அரசாங்கத்தின் ஏற்பாட்டில் ஒழுங்குபடுத்தப்பட்ட உலங்கு வானூர்தியில் சென்று இலங்கை விமானப் படையினர் காட்டுகின்ற இடங்களைப் பார்வையிடுவதென்பது நடந்த அழிவை மதிப்பிடுவதற்கான ஐ.நா சபையின் வழிமுறையாக இருப்பதுதான் மிகப்பெரும் வேடிக்கை.

உண்மையில் வன்னியில் நடந்த இன அழிப்புப் போரில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களை நேரில் சென்று சந்தித்து அவர்களுடன் கலந்துரையாடி நிலைமையைக் கேட்டறியும் போதுதான் உண்மையை அறிய முடியும்.

ஆனால் இதனைச் செய்வதற்கு அன்று ஐ.நா சபை தயாராக இல்லை.

மாறாக, பாதிப்பை ஏற்படுத்திய தரப்பு ஐ.நா சபையின் செயலாளர் நாயகத்தை அழைத்துச் சென்று வன்னியில் சில குறிப்பிட்ட இடங்களைக் காண்பிப்பதென்றால், இதற்குள் ஏதேனும் நீதி நியாயத்துவம் உண்டா? என்பதை ஒருகணம் சிந்தித்தாக வேண்டும்.

சரி, அதுதான் நடக்கவில்லை என்றால் வன்னியில் நடந்த பேரவலத்தை சனல் 4 தொலைக்காட்சி மிகத் தெளிவாக வீடியோ ஆதாரங்களுடன் வெளிப்படுத்திய பின்பும் தமிழ் மக்களுக்கு நீதி வழங்குவதில் ஐ.நா மனித உரிமைகள் ஆணையத்தால் முடியவில்லை.

ஆக, இவையாவற்றுக்கும் பின்னால் பலமான நாடுகளின் ஆதரவு ஈழத் தமிழ் மக்களுக்கு இல்லை என்பது புரிந்து கொள்ளப்பட வேண்டும்.

அதாவது அமெரிக்காவுடன் அல்லது இந்தியாவுடன் அல்லது சீனாவுடன் இலங்கை பகை கொண்ட நாடாக இருந்திருப்பின், தமிழினத்துக்கான நீதி கனதியானதாக வழங்கப்பட்டிருக்கும்.

என்ன செய்வது எல்லா நாடுகளுக்கும் கதவைத் திறந்து விடுகின்ற இலங்கை ஆட்சியாளர்களைத் தண்டிப்பதனால் நமக்கு என்ன நன்மை என்று சிந்திக்கின்ற நாடுகள், கால அவகாசத்தைக் கொடுத்துக் காலத்தைக் கடத்துகிறது.

ஆம், தண்டனை என்பது தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட பாதிப்புக்கானதல்ல. மாறாக இலங்கையுடன் வெளிநாடுகளுக்கு ஏதும் பிரச்சினை இருக்கிறதா? என்பதைப் பொறுத்தே அமைகிறது. ஆகையால் தமிழினத்துக்கான நீதி வானுலகில் இருந்து வந்தாலன்றி வேறு வழியில்லை என்பதே உண்மை.

## ஜெனிவா விவகாரத்தில் இந்தியா இலங்கைக்கு எதிராக செயற்படாது

### அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்

(கொழும்பு)

இலங்கைக்கு எதிராக இந்தியா ஒருபோதும் செயற்படாது. ஜெனிவா விவகாரத்தில் இந்தியா இலங்கைக்கு ஆதரவளிக்கும். அதற்கான அவசியமும் காணப்படுகிறது என கல்வி அமைச்சர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுன வின் காரியாலயத்தில் நேற்று திங்கட்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை வரையறைக்குட்பட்டு செயற்பட வேண்டும்.

நாட்டின் உள்ளக விவகாரத்தில் தலையிடவும், இலங்கைக்கு எதிராக செயற்படவும் மனித உரிமை ஆணையாளருக்கு அதிகாரமில்லை எனவும் சுட்டிக்காட்டினார். (ம-3)

## திட்டமிட்டபடி பரீட்சையை நடத்துவோம்

கோவிட்-19 வைரஸ் தொற்றுக்குள்ளாகியுள்ள பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு தோற்றுவதற்காக ஒவ்வொரு மாவட்டத்திலும் இரண்டு விசேட பரீட்சை மண்டபங்கள் அமைக்கப்படும். கோவிட்-19 வைரஸ் தாக்கத்துக்கு மத்தியில் கல்வி பொது தராதர சாதாரணதர பரீட்சையை சிறந்த முறையில் நடத்தி முடிப்போம் என கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி.எல் பீரிஸ் தெரிவித்தார். (ம-3)

## போதைப்பொருள் பாவனை அதிகரிப்பு

### மக்கள் கவலை

(யாழ்ப்பாணம்)

ஏழாலை, குப்பிளான், குரும்பசிட்டி ஆகிய பிரதேசங்களில் கசிப்பு மற்றும் போதைப் பொருள் பாவனைகள் அதிகரித்துக் காணப்படுவதாக அப்பகுதி பொது மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்நிலையில் அப்பகுதி பாடசாலை மாணவர்கள் மற்றும் பொது மக்களுக்கு இடையூராகக் காணப்படுவதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அப்பகுதி கிராமசேவகர்கள் மற்றும் பொலிஸார் உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் பொது மக்கள் வேண்டுகோள் விடுக்கின்றனர். - (ம-3)

## எழுச்சி பேரணி தொடர்பில் சட்டத்தரணி சுகாஸிடம் பொலிஸார் வாக்குமூலம்

(யாழ்ப்பாணம்)

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டிவரை போராட்டத்தில் கலந்து கொண்டிருந்தமை தொடர்பாக தமிழ்தேசிய மக்கள் முன்னணியின் முக்கியஸ்தரும் சட்டத்தரணியுமான சுகாஸிடம் பொலிஸார் நேற்று வாக்குமூலம் பதிவு செய்துள்ளனர்.

நீதிமன்ற தடை உத்தரவை மீறி போராட்டத்தில் கலந்து கொண்டிருந்தமை தொடர்பாக சட்டத்தரணி சுகாஸ் உள்ளிட்டோர் மீது பருத்தித்துறை நீதிமன்றில் பி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டிருக்கும் நிலையில் நேற்று மாலை தமிழ் தேசிய மக்கள் முன்னணி அலுவலகத்தில் சட்டத்தரணி சுகாஸிடம் வல்வெட்டித்துறை பொலிஸார் வாக்குமூலம் பதிவு செய்திருக்கின்றனர். (ம-3)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 24 ஆம் திகதி புதன்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை **யாழ். பிரதேசத்தில்** வில்லூன்றி, நாவாந்துறை ஆகிய இடங்களிலும்,

**வவுனியா பிரதேசத்தில்** 12.30 மணியிலிருந்து 5 மணிவரை உயிலங்குளத்திலிருந்து சிறுநாவற்குளம் வரை, கமலாம்பிகை அரிசி ஆலை ஆகிய பிரதேசங்களிலும் மின் தடைப்படும்.

## மேலும் 5 லட்சம் தடுப்பூசிகள்

(கொழும்பு)

மேலும் 5 இலட்சம் ஒக்ஸ்போர்ட் அஸ்ட்ரா ஜெனகா தடுப்பூசிகளை இலங்கைக்கு வழங்க இந்தியா உறுதியளித்துள்ளதாக பதில் சுகாதார அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

அதன்படி எதிர்வரும் வியாழக்கிழமை இரவு குறித்த தடுப்பூசிகள் இலங்கையை வந்தடையும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

## சுவாமி விவேகானந்தரின் சிந்தனைத்துளிகள்



### பிரதிபலன் எதிர்பாராதே

❖ நமது உள்ளங்களை திறந்து வைத்திருந்தால், உலகிலுள்ள நல்ல நினைவுகள் அனைத்துக்கும் உரிமையுள்ளவர்களாகி விடுவோம்.

❖ கடவுளை நம் தந்தையாக ஒப்புக் கொண்டு விட்டதால், நம்முடன் வாழ்பவர்களை சகோதரர்களாக அங்கீகரிக்க வேண்டும். அவர்களுடன் இணக்கமாக நடந்து கொள்ள வேண்டும்.

❖ பணிவுக்கும், மரியாதைக்கும் பிரதிபலனாக இறைவன் பல நன்மைகளைத் தரவேண்டும் என்று எதிர்பார்க்கும் வரை உண்மையான பக்தி உண்டாகாது.


❖ மனிதன் பிறந்தது இயற்கையை வெல்வதற்காகத் தான். அதற்குப் பணிந்து போவதற்கல்ல.

❖ சக்தி என்பது நன்மை, தீமை என்னும் இருவழிகளில் வெளிப்படுகிறது. கடவுளும், தீயவனான அரக்கனும் எதிரெதிர் நீரோட்டம் உள்ள ஒரே ஆறுதான். நல்ல வழியில் சக்தியை செலவழிப்பதே உத்தமம்.

❖ இல்லறம் நடத்துபவனுக்கும், துறவறம் பூண்டவனுக்கும் இடையில் உயர்வு தாழ்வு இல்லை. அவரவர் நிலையில் அவரவர் சிறந்தவர்கள்.

❖ பக்தியில் ஈடுபடும் போது கடவுளைத் தனியாகவும், நம்மை வேறாகவும் பிரித்துப் பார்க்க வேண்டும்.

# அமரத்துவம் பெற்ற வைத்தியர் சிங்க அரியரட்ணத்தின் வாழ்க்கைப் பயணம்



மறைந்தார் மாண்பு

"தோன்றிற் புகழோடு தோன்றுக" என்ற வள்ளுவர் வாக்கிற்கிணங்க 1953ஆம் ஆண்டு மாசி மாதம் 23ஆம் திகதி வட்டுக்கோட்டையில் அமரர் வைத்தியர் தம்பிப்பிள்ளைக்கும் செல்லமுத்து அம்மையாருக்கும் சிரேஷ்ட புத்திரனாகப் பிறந்த சிங்க அரியரட்ணம் தமது சொந்த ஊரான தெல்லிப்பழையில் யூனியன் கல்லூரியில் பாடசாலைக் கல்வியை முடித்து லங்கா ஆயுர்வேதக் கல்லூரியில் சித்த ஆயுர்வேதக் கல்வியைக் கற்று, வைத்தியராகப் பட்டம்பெற்றுப் பணியாற்றிப் பல்வேறு சமூக நலன்சார் செயல்களில் ஈடுபட்ட ஒரு பெருந்தகையாளர் ஆவார்.

அன்னார் 2021 தை மாதம் 24ஆம் திகதி தம் பூத உடலை நீத்துப் புகழுடம்பெய்திய நிலையில் அவரை நினைவுகூரும் முகமாக அவரது சேவைகளைப் பதிவு செய்வது அவருக்கு நாம் செய்யும் ஒரு சமர்ப்பணமாகும். சிங்க அரியரட்ணம் சித்த வைத்தியப் பரம்பரையில் மூன்றாவது தலைமுறையில் தோன்றியவராவார். ஆழ்வாப்பிள்ளை சுப்பிரமணியம், சுப்பிரமணியம் தம்பிப்பிள்ளை, தம்பிப்பிள்ளை சிங்க அரியரட்ணம் என்று வைத்தியப் பரம்பரையில் தடம் பதித்தவர் ஆவார். இவரது பெரிய தகப்பனார் அமரர் சுப்பிரமணியம் சிவப்பிரகாசமும் வட்டுக்கோட்டையில் புகழ்பெற்ற வைத்தியராக விளங்கியமை குறிப்பிடத்தக்கது. இத்தகைய பின்னணியில் சிங்க அரியரட்ணம் தனது வைத்திய சேவையை மூளாயில் உள்ள வைத்திய நிலையத்திலும் தமது இல்லத்திலும் தொடர்ந்து செய்து வந்தார்.

இவரது வாழ்க்கை வரலாற்றில் தமது தொழிலோடு நின்றுவிடாது சமூகப் பணிகளில் ஈடுபட்டு வந்தமை அவரை மக்கள் மத்தியில் ஒரு தொண்டனாக நிலைநிறுத்தியது. அந்த வகையில், காரைநகர் தனியார் சிற்றூர்திசங்கத் தலைவராக 34வருடங்கள் கடமையாற்றி ஓய்வு நிலையில் அச்சங்கத்தின் போசகராகவும் ஆலோசகராகவும் பணியாற்றிய நிலையில் இவ்வுலகை நீத்தார். குடும்பம், குடும்ப உறவுகளின் தேவைகளைப் பூர்த்தி செய்து குடும்பத்துக்கு அப்பால் சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கப் பணிப்பாளர் சபை உறுப்பினராகவும், வலிகாமம் மேற்கு ஆயுர்வேதப் பாதுகாப்புச் சபைச் செயலாளராகவும், வட்டு.தெற்கு கிராம அபிவிருத்திச் சபைப் பொருளாளரா்கவும் விளங்கியமை குறிப்பிடத்தக்கது. மேலும் யாழ்ப்பாணம் தனியார் பஸ் சங்க கூட்டிணைக்கப்பட்ட இணையத்தின் பொருளாளராகவும் தமது சேவையை விரிவுபடுத்தியிருந்தார்.

இவ்வாறு சமூக நலன்களில் அக்கறை கொண்டு தூய உள்ளத்தோடு "கடமையைச் செய் பலனை எதிர்பாராதே" என்ற கீதாசிரியனின் போதனைக்கேற்ப வாழ்ந்து "விடக்குடம்பினுட்கிடப்ப ஆற்றேன்" என்று மாணிக்கவாசகர் அரற்றியதைப்போன்று விஷக்கூடாகிய இந்த உடலைவிட்டுச் சிவபுரத்திற்கே சென்று விட்டார். அவரது ஆத்மா பரப்பிரமத்தோடு ஒன்றி ஜீவப் பிரம்ம ஐக்கியமாகட்டும்.

**கலாநிதி ஏ.என்.கிருஷ்ணவேணி**

# குப்பையில் வீசப்பட்ட தங்க நகைகள் உரிமையாளரிடம் ஒப்படைப்பு



(அம்பாறை)

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறையில் திண்மக் கழிவகற்றல் சேவையின் போது ஒரு வீட்டின் குப்பைப் பொதியினுள் தவறுதலாக வீசப்பட்ட 12 பவுண் தங்க நகை உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.


கடந்த 20ஆம் திகதி சம்மாந்துறை சின்னப்பள்ளி வீதியில் குறித்த வீட்டு உரிமையாளர் தனது வீட்டில் திருமண நிகழ்வு இடம் பெற்றமையினால் 12 பவுண் தங்க நகையை தன்னையறியாமல் குப்பையோடு குப்பையாக கழிவுப் பொதிக்குள் வீசியுள்ளார்.

அப்பொதி சம்மாந்துறை பிரதேச சபையின் கழிவகற்றல் வாகனத்திற்கு வழங்கப்பட்ட நிலையில், குறித்த வீட்டு உரிமையாளர் வீட்டில் இருந்த நகையை தேடிய வேளையில், காணாமல் போயிருப்பது கண்டறிப்பட்டதை தொடர்ந்து, இவ்விடயம் சம்மாந்துறை பிரதேச சபை திண்மக்கழிவகற்றல் சேவை மேற்பார்வையாளரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இதனை தொடர்ந்து சம்மாந்துறை பிரதேச சபை செயலாளரின் பணிப்புரைக்கமைவாக உடனடியாக செயற்பட்டு, சம்மாந்துறை பிரதேச சபையின் வங்களாவடி சேதனப் பசளை உற்பத்தி நிலையத்தில் ஊழியர்களின் உதவியுடன் குறித்த திண்மக்கழிவகற்றல் வாகனத்தில் சேகரிக்கப்பட்டிருந்த அனைத்து கழிவுக் குப்பைப் பொதிகளையும் பெரும் சிரமங்களுக்கு மத்தியில் ஆராய்ந்து, குறித்த நபரின் 12 பவுண் தங்க நகை தேடிக் கண்டு பிடித்து உரிய நபரிடம் நேற்று ஒப்படைக்கப்பட்டது.

இவ்வாறாக நகை, பணம், பெறுமதியான பொருட்கள் உரிமையாளர்களை அறியாமல் குப்பைகளுக்குள் வீசப்பட்ட பொருட்கள் உரிமையாளிடம் ஒப்படைந்த பல சம்பவங்கள் இடம் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# கொவிட் தடுப்பூசி குறித்து தவறான தகவல்கள்



(கொழும்பு)

நாட்டில் கொரோனா தடுப்பூசி செலுத்தப்படுவது குறித்து சிலர் தவறான கருத்துகளை வெளியிடடு வருகின்றனர் என பதில் சுகாதார அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.

60 வயதுக்கு மேற்பட்டோருக்கு கொரோனா தடுப்பூசி செலுத்தப்படாதென தெரிவிக்கப்பட்டுவரும் கருத்தில் எவ்வித உண்மையும் இல்லை என அவர் தெரிவித்தார்.

அத்துடன் நாட்டில் கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை வெற்றிகரமாக இடம்பெற்று வருவதாகத் தெரிவித்துள்ள அவர் இதனை விரும்பாத சிலர் போலிப் பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றனர் என அவர் குறிப்பிட்டார். (நி-8)

# திட்டமிடலற்ற தடுப்பூசி வழங்கல் செயற்றிட்டத்தால் சிக்கல் நிலை

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் குற்றச்சாட்டு



**(கொழும்பு)**

**உலக நாடுகள் அனைத்தும் முறையான திட்டமிடலின் அடிப்படையில் கொவிட் தடுப்பூசிகளை வழங்குகிறது. ஆனால் இலங்கையில் அவ்வாறு எந்தவொரு திட்டமிடலும் இன்றி தடுப்பூசி வழங்கப்படுவதால் சுகாதார ஊழியர்களும் பொது மக்களும் பாரிய அசௌகரியங்களுக்கு முகம்கொடுத்துள்ளதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பணிப்பாளர் வைத்தியர் ஹரித அளுத்கே தெரிவித்தார்.**

கொழும்பில் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் ,

உலக நாடுகள் அனைத்தும் தொற்றா நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் வயதானவர்களுக்குமே தடுப்பூசி வழங்குவதற்கு முன்னுரிமை வழங்கியது. ஆனால் இலங்கையில் எவ்வித திட்டமிடலும் இன்றி தடுப்பூசி வழங்கும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுகின்றன.

ஒழுங்குபடுத்தப்பட்ட திட்டமிடலொன்று தயாரிக்கப்பட்டு ஜனவரி 15 ஆம் திகதி உலக சுகாதார ஸ்தாபனத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டது. ஆனால் தற்போது அந்தத் திட்டமிடல்கள் முழுமையாக மாற்றப்பட்டுள்ளன.

இந்த அடிப்படையில் யாருடைய தேவைக்காக, எந்த தொழில்நுட்ப குழுவின் ஆலோசனைக்கமைய இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்பது தெரியவில்லை.

இதன் மூலம் சுகாதார ஊழியர்கள் பாரிய நெருக்கடிகளுக்கும் சிக்கல்களுக்கும் முகம்கொடுத்துள்ளனர்.

புதிய வேலைத்திட்டம் தொடர்பில் வழிகாட்டல் ஆலோசனைகளை வெளியிடுவதற்குக் கூட சுகாதார அமைச்சின் தொற்று நோய் பிரிவினால் முடியாமல் போயுள்ளது.

உதாரணமாக 30 - 60 வயதுக்கு இடைப்பட்டவர்களுக்கு தடுப்பூசி வழங்கப்படுகிறது என்றால் குறிப்பிட்ட நபர்கள் எவ்வாறு தேர்ந்தெடுக்கப்படுகிறார் என்பதும் தெரியப்படுத்தப்படவில்லை.

தேர்தல் இடாப்பின் மூலம் தகவல்கள் சேகரிக்கப்படுகின்றதா? அல்லது பொது சுகாதார பரிசோதகர்கள் மூலம் இதற்கான நடவடிக்கை எடுக்கப்படுகின்றதா? என்பதும் தெளிவுபடுத்தப்படவில்லை.

இவ்வாறான செயற்பாடுகள் மூலம் மக்களும் கலவரமடைந்துள்ளனர் என அவர் தெரிவித்தார். (நி-4)

## வடக்கில் நேற்று...

நேற்று 423 பிசிஆர் மாதிரிகள் சோதனையிடப்பட்டன.

இதில், பூநகரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவை சேர்ந்த 2 பேர், மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் ஒருவர், முல்லைத்தீவு மாவட்ட பொது வைத்திய சாலையில் ஒருவர், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒருவர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டனர். (ம-3,18,33)

## பேரணி தொடர்...

சாளருமான எம்.ஏ.சுமந்திரனிடம் பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

கொழும்பில் உள்ள சுமந்திரனின் அலுவலகத்திற்கு நேற்று காலை சென்ற பொலிஸார் அங்கு சுமந்திரனிடம் வாக்கு மூலத்தை பதிவு செய்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான பேரணியில் கலந்து கொண்டதாக குற்றஞ்சாட்டி பொலிஸார் முன்னெடுத்து வருகின்ற விசாரணைகளின் தொடர்ச்சியாக நேற்று சுமந்திரனிடம் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

இந்நிலையில் விசாரணை மேற்கொண்ட பொலிஸாருக்கு தேநீர் கொடுத்து செல்பி எடுத்து சுமந்திரன் எம்.பி வாக்கு மூலம் வழங்கினார். (ம-3)


தரு திரி சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 27 திகதி 21/02/2021
ஆங்கில எழுத்து Y
வெற்றி இலக்கங்கள் 32 50 85 95
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2021.02.22
சீட்டிழுப்பு இலக்கம் - 443
F 06 21 38 50
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
NATIONAL LOTTERIES BOARD
தொலைபேசி : 011 460 7000 / 011 232 4324
உத்தியோகபூர்வ முடிவுகளுக்கு : 011 456 9416

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள் NLB
சீட்டிழுப்பு திகதி 22.02.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2701
ஆங்கில எழுத்து P
வெற்றி இலக்கங்கள் 12 20 48 54
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2021/02/22
சீட்டிழுப்பு இலக்கம் 4406
ஆங்கில எழுத்து N
வெல்லப்பட்ட இலக்கங்கள் 4 2 2 1 8 2
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 22/02/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0772
வெற்றி எழுத்து N
சுப்பர் இலக்க 22
வெற்றி இலக்கங்கள் 15 17 58 65

வாசனா சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1668 திகதி 2021.02.22
ஆங்கில எழுத்து F
வெற்றி இலக்கங்கள் 07 24 51 73
தேசிய லொத்தர் சபை


## காணாமல் ஆக்க...

போராட்டத்தில் ஈடுபட்டுவரும் தமிழர் தாயக வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் சங்கத்தின் செயலாளர் கோபால கிருஸ்ணன் ராஜ்குமாரிடம் பயங்கரவாத தடுப்பு விசாரணை பிரிவினர் நேற்று விசாரணைகளை முன்னெடுத்தனர்.

அவர்கள் தொடர் போராட்டம் மேற்கொண்டுவரும் வவுனியா வீதி அபிவிருத்தி திணைக்களத்திற்கு முன்பாக அமைந்துள்ள கொட்டகையில் குறித்த விசாரணை முன்னெடுக்கப்பட்டிருந்தது. (ம-3,299)

## சிறுபான்மை...

ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் 46ஆவது கூட்டத் தொடர் நேற்று திங்கட்கிழமை ஜெனிவாவில் ஆரம்பமாகிய நிலையில் முதல்நாள் அமர்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

மனித நல்வாழ்வுக்கு பல்லுயிர் அடிப்படை என்பது போல, சமூகங்களின் பன்முகத்தன்மையும் மனிதகுலத்திற்கு அடிப்படை என்பதை சுட்டிக்காட்டிய அவர், அனைத்து சமூகங்களினதும் மத மற்றும் பாரம்பரிய ரீதியான தனித்துவ அடையாளங்களைப் பாதுகாப்பதற்கும் உரிமைகளுக்கு மதிப்பளிப்பதற்கும் ஏற்றவகையிலான கொள்கைகள் வகுக்கப்பட வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

இருப்பினும், சிறுபான்மை சமூகங்களின் கலாசார மற்றும் மத அடையாளத்தை அழிக்க முற்படும் செயற்பாடுகளையும் தாம் அவதானிப்பதாக அன்டோனியோ குட்ரெஸ் தெரிவித்தார். (ம-3)

## நாட்டில் மேலும்...

நேற்று உயிரிழந்துள்ளதாக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் தெரிவித்தார்.

அதன்படி, நாட்டில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 450 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் நேற்று +518 பேர் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். (ம-3)

## அமெரிக்க...

யாழ்ப்பாணம் விஜயம் செய்யவுள்ளார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக மருத்துவ பீடத்துக்கு அமெரிக்காவினால் பி.சி.ஆர் இயந்திரம் அன்பளிப்பு செய்யப்படவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொள்வதற்காக அமெரிக்கத் தூதுவர் யாழ்ப்பாணம் விஜயம் செய்யவுள்ளார்.

பி.சி.ஆர்.இயந்திரம் கையளிக்கும் நிகழ்வு இன்று மாலை 4.30 மணிக்கு இடம்பெறவுள்ளது. (ம-3)

## இலங்கை விவ...

ஐ.நா மனித உரிமைகள் 46ஆவது கூட்டத்தொடர் நேற்று ஆரம்பமான நிலையில் இந்தியா தனது ஆதரவினை இலங்கைக்கு வழங்கும் என தாம் நம்புவதாக இலங்கை வெளிவிவகார அமைச்சர் தினேஸ் குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

எமக்கு ஆதரவு வழங்குமாறு கோரி தூதரகம் ஊடாக ஜனாதிபதியின் கையொப்பத்துடன் இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

அத்துடன் ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் பல்வேறு உறுப்பு நாடுகளுக்கும் இவ்வாறு இலங்கைக்கு ஆதரவு வழங்குமாறு கோரிய கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் இறைமை உள்ள நாடு என்ற வகையில் இலங்கைக்கு சம்பந்தப்பட்ட நாடுகள் ஆதரவு வழங்கும் என்று நம்புகிறோம் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஐ.நா கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பாக மற்றுமொரு பிரேரணை கொண்டு வரப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறு புதிய பிரேரணை இலங்கை தொடர்பாக கொண்டுவரப்படும் பட்சத்தில் அதனை இலங்கை எதிர்க்கும் போது அங்கு வாக்கெடுப்பு நடத்தப்படும். வாக்கெடுப்பு நடத்தப்படும்போது இலங்கைக்கு ஆதரவு வழங்குமாறு இலங்கை மனித உரிமை பேரவையின் பல்வேறு உறுப்பு நாடுகளிடம் கோரிக்கை விடுத்திருக்கிறது.

மேலும் இன்று இரவு 8 மணிக்கு இணைய வழியாக ஐ.நா மனித உரிமைகள் பேரவை கூட்டத் தொடரில் உரையாற்றவுள்ளேன். இதன்போது இலங்கையின் நிலைப்பாடு தெளிவாக ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவைக்கு அறிவிக்கப்படும்.

நாங்கள் என்ன செய்திருக்கின்றோம், என்ன செய்யப் போகின்றோம், எமது நிலைப்பாடு என்ன என்ற விடயங்களை நாங்கள் மிகத்தெளிவாக விரிவாக அறிவிப்போம். அதேபோன்று ஜெனிவாவில் மனித உரிமை ஆணையாளர் இலங்கை தொடர்பாக வெளியிட்ட அறிக்கைக்கு நாம் எமது எதிர்ப்பை பதிவு செய்திருக்கின்றோம்.

ஐ.நா மனித உரிமை பேரவையில் இலங்கைக்கு பல நாடுகளினாலும் ஆதரவு வழங்கப்படும் என்று நாங்கள் நம்புகிறோம். இந்தியா என்பது ஒரு மிகப்பெரிய நாடு. இந்தியாவானது இலங்கைக்கு சகல வழிகளிலும் ஒத்துழைப்பு வழங்கும் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம் என்றார். (ம-3)

## நரம்பியல் மருத்...

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நேற்று இடம்பெற்ற பிசிஆர் பரிசோதனையிலேயே அவருக்கு தொற்று உள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

அவர் கொழும்பு சென்று திரும்பிய நிலையில் தொற்றுக்கான அறிகுறிகள் காணப்படுவதாக தாமே முன்வந்து பிசிஆர் பரிசோதனையை முன்னெடுத்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை, கோவிட் -19 தடுப்பூசியின் முதலாவது டோஸை அவர் அண்மையில் பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3,18)

## நல்லி...

மற்றும் சீனா உள்ளிட்ட நாடுகளின் தற்போதைய மனித உரிமை நிலைகள் குறித்தும் அவர் நேற்று பேசினார்.

மனித உரிமைகளை மேம்படுத்துவதையும் பாதுகாப்பதையும் இங்கிலாந்து சர்வதேச முன்னுரிமைகள் பட்டியலில் வைக்கிறது. சர்வதேச சட்ட விதி மற்றும் உலகெங்கிலும் உள்ள மக்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரங்களை நாங்கள் தொடர்ந்து நிலைநிறுத்துவோம் என்றார். (ம-3)

## சாவகச்சேரியை...

சாவகச்சேரியை சேர்ந்த ஆசிரியை ஒருவருக்கு தற்செயலான பரிசோதனையில் கொரோனா தொற்று உறுதியானது.

இதனையடுத்து நேற்று யாழ்.போதனா வைத்தியசாலை மற்றும் யாழ்.பல்கலைக் கழக மருத்துவபீடம் ஆகியவற்றில் 752 பேருக்கு பி.சி.ஆர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதில் கிளிநொச்சியைச் சேர்ந்த 2 பேருக்கு கொரோனா தொற்று உறுதியானது.

அதில் ஒருவர் குறித்த ஆசிரியை எனவும் ஏற்கெனவே தொற்றுக்குள்ளான ஆசிரியையுடன் தொடர்பில் இருந்தவர் எனவும் மாகாண சுகாதார பணிப்பாளர் ஆ.கேதீஸ்வரன் கூறியுள்ளார். (ம-3)

## இலங்கைத்...

சிங் தெரிவித்துள்ளார்.

சேலத்தில் இடம்பெற்ற பாஜகவின் இளைஞர் அணியின் மாநாட்டில் உரையாற்றுகையில் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் தமிழ் அகதிகளை வலுப்படுத்தும் நடவடிக்கைகளில் மோடி தொடர்ச்சியாக ஈடுபட்டு வந்துள்ளார்.

2015இல் பிரதமரான பின்னர் மோடி யாழ்ப்பாணத்திற்கு சென்றுள்ளார். யாழ்ப்பாணம் சென்ற ஒரேயொரு பிரதமர் அவர்.

உள்நாட்டு யுத்தம் காரணமாக வீடுகளை இழந்த சகோதர சகோதரிகளிற்கு நாங்கள் வீடுகளை வழங்கியுள்ளோம் எனவும் ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார். (ம-3)


அத கோடிபதி ADA KOTIPATHI
கிழமை: திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல: 1202
வர்ணம் : சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 22.02.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 110,799,965
வெற்றி இலக்கங்கள் 30 46 50 76
ஆங்கில எழுத்து Z
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

சனிதா Shanida
கிழமை: திங்கட்கிழமை
சீட்டிழுப்பு இல: 3532
வர்ணம் : கடும் நீலம்
சீட்டிழுப்பு திகதி: 22.02.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 34,010,037
வெற்றி இலக்கங்கள் 02 05 59 60
ஆங்கில எழுத்து S
ரூ. 500/- பரிசுக்கான விசேட இலக்கம்
அபிவிருத்தி லொத்தர் சபை
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
சுப்பர் ஜக்பொட் 2,409,366/=
திகதி : 22.02.2021
வெற்றி வாரம் : 3083
வர்ணம் : மஞ்சள்
வெற்றி இலக்கங்கள் 32 33 48 52
விருச்சிகம்
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 11,169,520

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1376
நிறம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 22/02/2021
தினம் திங்கள்
வெற்றி எழுத்தும் இலக்கங்களும் H 25 31 39 57
அடுத்த சுப்பர் ஜக்பொட் 70,373,695/=
வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
அபிவிருத்தி லொத்தர் சபை
தொலைபேசி: 0112 333 546-47

ஜயோதா Jayoda
சீட்டிழுப்பு வாரம் 1735
சீட்டிழுப்பு திகதி 22.02.2021
வெற்றி இலக்கங்கள் 16 47 67 69
ஆங்கில எழுத்து X
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 22,070,444
6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.
வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்
தொ. பே. : 0112 333 546/47
Web: www.dlb.lk

**அறைகள் வாடகைக்கு**

பிறவுண் வீதியில் அமைந்துள்ள வீடொன்றில் வேலை செய்யும் / படிக்கும் பெண் பிள்ளைகளுக்கு அறைகள் வாடகைக்கு உண்டு. (5879)

**076 132 5353**

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
**021 221 7603**
**021 567 1532**

**விரைவு பொதிகள் சேவை**
**V2 TRAVELS**
**UK-1000/=Kg**
பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் / நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் 1150/=Kg
எமது நேரடிக்கிளைகள்
யாழ்ப்பாணம் • புத்தூர் • கோப்பாய் • நெல்லியடி • கொடிகாமம் • மானிப்பாய் • புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • கிளிநொச்சி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை • சாவகச்சேரி (C-1456)
**0768226240** DHL

**அண்ணா** EXPRESS Courier Service
விரைவுப் பொதிகள் சேவை
3-6 நாட்கள் (C-1476)
லண்டன் 1000/= 070 3305500 075 3305500
976, கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம் | சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை | பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை | மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு
லண்டன், பிரான்ஸ், ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
15,000/= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



## பூபதி முருகன்

தோற்றம் 25.10.1945 | மறைவு 23.02.2020

இன்பம் பொங்கும்
எம் குடும்பத்தின்
ஒளிக்கீற்றாய் விளங்கினீர்
எமைப் பரிதவிக்கவிட்டு
எங்கே அம்மா சென்றீர் ?

மகிழங்கேணி வீதி,
கச்சாய், சாவகச்சேரி. (5638)

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

# 68ஆவது பிறந்த நாளும் 31ஆம் நாள் நினைவஞ்சலியும்



அமரர்

## தம்பிப்பிள்ளை சிங்கஅரியரட்ணம்

(முன்னாள் தலைவர் 1985 - 2019 வரை, இந்நாள் கௌரவ வாழ்நாள் போஷகர் 2021 வரை )

அவர்களின் நினைவாக

யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை கிராமத்திலே வாழ்ந்த காரைநகர் தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் முன்னைநாள் தலைவரும் கௌரவ ஆயுட்கால வாழ்நாட் போஷகருமான தம்பிப்பிள்ளை சிங்கஅரியரட்ணம் அவர்களின் மறைவு எம் சங்கத்திற்கு பேரிழப்பாகும். காரைநகர் தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் வளர்ச்சிக்கு அவரது சேவைகள் அளப்பரியது. அவரது கடந்த கால சேவைகளின் நினைவுகள் வருமாறு...

- முப்பத்தைந்து வருட காலம் சங்கச் செயற்பாடுகளோடிணைந்தவர்.
- முப்பத்திநான்கு வருட கால தன்னிகரற்ற தலைவராக இருந்து சங்கத்தின் வளர்ச்சிக்காக உழைத்தவர்.
- இறுதி மூச்சு உள்ளவரை கௌரவ ஆயுட்கால வாழ்நாட் போஷகர் என்ற மேட்டிமையுடன் சங்கத்தின் செயற்பாட்டிற்காய் அர்ப்பணிப்புடன் ஈடுபட்டவர்.
- யாழ். மாவட்டத்தின் கூட்டிணைக்கப்பட்ட பஸ் கம்பனிகளின் இணையப் பொருளாளர் என்ற தகைமையோடிருந்து தன் அரிய செயற்பாட்டால் எமது சங்கத்திற்கு புகழையும் பெருமையையும் தேடித் தந்தவர்.
- காரைநகர் இறங்கு துறையில் எமது சங்கத்தின் செயற்பாட்டிற்கான இருப்பிடமாய் இரண்டு மாடிக் கட்டடங்களை தனி மனிதனாக நின்று உருவாக்கித்தந்தவர்.
- யாழ். மாவட்டத்தில் மிகச் சிறந்த சங்கம் காரைநகர் தனியார் பஸ் உரிமையாளர் சங்கம் என்ற மகுடத்தை எமது சங்கத்திற்குப் பெற்றுத்தந்த பிதாமகன் ஆவார்.



**தனியார் பஸ் உரிமையாளர் சங்கம், காரைநகர்**
**உரிமையாளர்கள், நிர்வாகத்தினர், ஊழியர்கள்**

(5877)

## உலகின் சில அரசாங்கங்கள்

# கொரோனாவை காரணம் காட்டி அடிப்படை சுதந்திரத்தை மறுக்கின்றன

## ஜெனிவாவில் ஐ.நா செயலாளர் நாயகம்

(கொழும்பு)

உலகநாடுகளின் சில அரசாங்கங்கள் கொரோனா வைரஸ் பரவலை ஒரு காரணமாக முன்வைத்து, அடிப்படை சுதந்திரத்தை குற்றமாகப் பிரகடனப்படுத்துவதற்கும் சுயாதீன செய்தி அறிக்கையிடலைத் தடைசெய்வதற்கும் அரச சார்பற்ற அமைப்புக்களின் செயற்பாடுகளில் இடையூறுகளை ஏற்படுத்துவதற்கும் நடவடிக்கை எடுத்திருக்கின்றன என ஐ.நா செயலாளர் நாயகம் தெரிவித்துள்ளார். ஜெனிவாவில் நேற்று உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்.

சில அரசாங்கங்கள் கொரோனா வைரஸ் பரவல் நெருக்கடியைக் கையாளும் முறைமை தொடர்பில் விமர்சனங்களை முன்வைத்த மனித உரிமை ஆர்வலர்கள், ஊடகவியலாளர்கள், சட்டத்தரணிகள், அரசியல் செயற்பாட்டாளர்கள் மற்றும் வைத்திய நிபுணர்கள் அடக்குமுறைக்கு உள்ளாக்கப்பட்டதுடன் அவர்கள் தொடர்ந்தும் கண்காணிப்பிற்கு உட்படுத்தப்பட்டமை தொடர்பில் தகவல்கள் பதிவாகியுள்ளன என்று ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டரெஸ் சுட்டிக்காட்டியுள்ளார்.

அத்தோடு அண்மைக்காலமாக ஜனநாயகக்கொள்கைகள் புறக்கணிக்கப்படுதல், தன்னிச்சையான கைது நடவடிக்கைகள், சிவில் சமூக இடைவெளி வரையறுக்கப்படுதல், சிவில் சமூக அமைப்புக்கள் மீதான தாக்குதல்கள், சிறுபான்மையின சமூகத்தவர் மீதான மீறல்கள் உள்ளடங்கலாக உலகளாவியரீதியில் மனித உரிமை மீறல்கள் வெகுவாக அதிகரித்து வருகின்றன என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ம-03)

# பாகிஸ்தான் பிரதமர் இன்று இலங்கை விஜயம்

(கொழும்பு)

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான், இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு இன்று இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

இந்த விஜயத்தின்போது வர்த்தகம், சுகாதாரம், கல்வி, விவசாயம், விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம், பாதுகாப்பு, சுற்றுலா உள்ளிட்ட பல்வேறு துறைகள் தொடர்பில் கலந்துரையாடப்படவுள்ளது.

அத்துடன் இருதரப்பு புரிந்துணர்வு உடன்படிக்கைகள் சிலவற்றிலும் கைச்சாத்திடவுள்ளார். (ம-03)

**வேலை வாய்ப்பு**

யாழ். நகரில் இயங்கிவரும் புடவை நிறுவனம் ஒன்றிற்கு ஆண், பெண் வேலையாட்கள் தேவை.
( தகுதிக்கேற்ப சம்பளம் வழங்கப்படும்.)

தொடர்பு (C-1508)
**077 855 4840**

**பதவி வெற்றிடம்**

குறுகிய காலத்தில் பயிற்சியுடன் சாதிக்க விரும்பும் இளைஞர், யுவதிகளுக்கான வேலை வாய்ப்பு
O/L, A/L தோற்றியிருத்தல். முன் அனுபவம் கட்டாயமில்லை.
பயிற்சி காலத்தில் 20,000/= - 30,000/= வரை சம்பாதிக்கலாம்
பயிற்சி காலம் : 120 நாட்கள், 18-26 வயதுக்கிடைப்பட்டவர்களுக்கு பயிற்சியின் பின் தொழில். (5875)

**077 766 4474, 076 808 2241**

## ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலயம் கொக்குவில்

### வருடாந்த பொதுக்கூட்டம்

மேற்படி ஆலய வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 07.03.2021 ( ஞாயிற்றுக்கிழமை ) பிற்பகல் 4.00 மணிக்கு ஆலய முன்றலில் நடைபெறும்.

அங்கத்தவர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்வதுடன் பிரேரணைகள் ஏதும் இருப்பின் செயலாளருக்கு 28.02.2021 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றி

செயலாளர்
**ஸ்ரீ சாயி துர்க்காதேவி ஆலயம்**
கொக்குவில்

(5886)

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.02.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.